# කාර්යසාධන වාර්තාව
# செயற்திறன் அறிக்கை
# Performance Report
# 2017

**අග්‍රාමාත්‍ය කාර්යාලය**

**பிரதம அமைச்சர் அலுவலகம்**

**PRIME MINISTER'S OFFICE**



# செயற் திறன் அறிக்கை

# 2017

பிரதம அமைச்சர் அலுவலகம்

இல.58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை

கொழும்பு 07

தொலை பேசி: **011-2575317**

பெக்ஸ்: **011-2574143**

மின்னஞ்சல்: **info@pmoffice.gov.lk**

இணையத்தளம்: **www.pmoffice.gov.lk**

# உள்ளடக்கம்

**தலைப்பு** **பக்க எண்**


**01.** **அறிமுகம்** 1

1.1. தூரநோக்கு 3

1.2. செயற்பணி 3

1.3. அலுவல்கள் 3 - 4

**02.** **கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி** 5

2.1. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு 7 - 8

2.2. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு 8 - 9

2.3. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி துரித வேலைத் திட்டம 10 - 11

2.4. உத்தேச கிராம அரசு 11 - 12

2.5. உத்தேச அரச சேவை வழங்கல் அதிகார சபை 12 - 13

2.6. GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளல் 13

2.6.1. பொதுவான பெறுகை தீர்வை வரித் திட்டம் (GSP+) கண்காணிப்பு பொறிமுறை 14 - 15

2.7. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் சிபாரிசுகளை ஒன்றிணைப்பதற்கான அமைச்சரவைக் குழு 16 - 17

2.8. தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2017-2021 17 - 18

2.9. இரண்டாவது இந்து சமுத்திர மாநாடு -2017 18 - 20

2.10. கொள்கை உருவாக்கல் அலுவலகம் 20 - 23

2.11. கல்வி மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு 23

2.12. தேசிய ஊடக மத்திய நிலையம் 23 - 24

| தலைப்பு | பக்க எண் |
|---|---|


**03.** **சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு** ........ 25

3.1. பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள் ........ 27

3.1.1. சுவிட்சர்லாந்துக்கான விஜயம் - உலக பொருளாதார மாநாடு -2017 ........ 27 - 28

3.1.2. அவுஸ்திரேலியாவுக்கான விஜயம ........ 28 - 29

3.1.3. ஜப்பானுக்கான விஜயம் ........ 30

3.1.4. வியட்னாமுக்கான விஜயம ........ 31 - 32

3.1.5. இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2017 ஏப்ரல் ........ 32 - 33

3.1.6. சீனாவுக்கான விஜயம் “ஒரே பாதை ஒரே இலக்கு” மாநாடு ........ 33 - 34

3.1.7 பின்லாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் ........ 35 - 36

3.1.8 இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2017 நவம்பர் ........ 36

3.2. இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்தல் ........ 37 - 39

**04.** **தேசிய நல்லிணக்கம், சமூக நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள்** ........ 41

4.1. தேசிய நல்லிணக்கம் ........ 43

4.1.1 நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம் ........ 43 - 45

4.1.2. அரசியல் யாப்பு மறுசீரமைப்புக்காக பொது மக்கள் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம் ........ 45 - 46

4.2. ஊழியர் நலனோம்புகை ........ 46

4.2.1. ஆயுர்வேத வைத்திய முகாம் ........ 46 - 47

4.3. மத அலுவல்கள் ........ 47

4.3.1. கொழும்பு நவம் மகா பெரஹரா ........ 47 - 48

4.3.2. அலரி மாளிகையில் ஆயிரம் பிக்குமார்களுக்கு தானம் வழங்கிய புண்ணிய நிகழ்வு – 2017 ........ 49

4.3.3. புனித தாதுக்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதிமிக்க பொருட்களை காட்சிப்படுத்தல் ........ 50

**தலைப்பு** **பக்க எண்**

4.3.4. புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம் ........ 50 - 51
4.3.5. இப்தார் வைபவம் ........ 52
4.3.6. கொள்ளுபிட்டி வாலுகாராம மகா விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா........ 53
4.3.7. தீபாவளிப் பண்டிகை ........ 54

**05. பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்** ........ 55
5.1. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றிய பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ........ 57 - 62
5.2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்............ 63

**06. பாராளுமன்றம் மற்றும் சட்ட ரீதியான அலுவல்கள்**........ 65
6.1. பாராளுமன்ற அலுவல்கள்........ 67
6.1.1. அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள், பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல் ........ 67 - 68
6.1.2. பாராளுமன்ற அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல் ........ 68 - 69
6.1.3. பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்........69 - 70
6.2. சட்ட ரீதியான அலுவல்கள........70
6.2.1. சட்ட வரைவுகளை மேற்கொள்வதுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவல்கள் ........ 70 - 71
6.2.2 வழக்கு நடவடிக்கைகள் ........71

**07.** மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்....73
7.1. மனித வளங்கள் அபிவிருத்தி ........ 75 - 80
7.2. உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்........81 - 82

**08. நிதிசார் முன்னேற்றம்** ........ 83
8.1. நிதிசார் முன்னேற்றம் ........ 85 - 86

# 01. அறிமுகம்

## 1.1 தூரநோக்கு

"சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கிமிக்கதோர் இலங்கை"

## 1.2 செயற்பணி

"இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றிற்கான தலைமைத்துவத்தை வழங்குதல்."

## 1.3 அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பிரதான அலுவல், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவல்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதாகும்.

அத்துடன், அரசாங்கத்தின் தேர்தல் பிரகடனமான **"60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐந்து அம்ச செயற்பாடு"** இன் பிரகாரம்,

- தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்
- ஊழலை பூண்டோடு ஒழித்தல்
- சுதந்திரத்தை உறுதி செய்தல்
- உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- கல்வியறிவை மேம்படுத்தல

போன்ற அலுவல்களை செயற்படுத்துவதற்காக இந்த அலுவலகம் ஒத்துழைப்பு வழங்கும். மேலும்,

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.
- கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்கு பதில்களை தயாரித்தல்.

- கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு வெளிநாட்டு தூதுக் குழுக்கள், வெளி நாட்டு தூதரக சேவை அதிகாரிகளுடன் தொடர்புகளை பேணி வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- கௌரவ பிரதமரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்
- கௌரவ பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- விசேட சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- கௌரவ பிரதமரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அலரி மாளிகை, பிரதம அமைச்சர் அலுவலகம், கௌரவ பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

# 02. கொள்கை உருவாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

## 2.1 பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு

பொருளாதார முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 2015.09.22 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு தாபிக்கப்பட்டதுடன், இந்தக் குழுவின் அலுவல்கள் பின்வருமாறு;

1) பொருளாதார அலுவல்கள், நிதி மற்றும் நிதிக் கொள்கை மற்றும் அரச நிதிசார் அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை நிருபங்களை பரிசீலணை செய்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

2) தேசிய முதலீட்டுத் திட்டம், அரச முதலீட்டுத் திட்டம் போன்றவற்றை உருவாக்கும்போது போது வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் தனியார் துறை முதலீடுகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிகாட்டல்கள்

3) பொருளாதார மற்றும் நிதிசார் சிக்கல்களுடன்கூடிய பிரேரணை சம்பந்தமாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

4) நாட்டின் முதலீடு /பொருளாதார அபிவிருத்தி மீது நேரடியான தாக்கத்தை செலுத்தும் பல்வேறு சட்டங்கள் அமுல்படுத்தப்படுத்தப்படும் விதத்தை கண்காணிப்புக்குட்படுத்தல்.

**குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| • கௌரவ ரணில் விக்ரமசிங்க | பிரதம அமைச்சர் (தலைவர்) |
| • கௌரவ நிமல் சிரிபால த சில்வா | போக்குவத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் |
| • கௌரவ ரவூப் ஹகீம் | நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் |
| • கௌரவ அனுர பிரிதர்ஷன யாப்பா | அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் |
| • கௌரவ மங்கள சமரவீர | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் |
| • கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் |
| • கௌரவ கபீர் ஹாஸீம் | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் |
| • கௌரவ மஹிந்த சமரசிங்க | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் |

- கௌரவ சாகல ரத்னாயக்க — சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்
- கௌரவ மலிக் சமரவிக்ரம — அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்த அமைச்சர்
- கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம — விசேட கடமைப் பொறுப்புக்கள் அமைச்சர்
- கௌரவ அர்ஜுன ரணதுங்க — பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

பிரதம அமைச்சரின் செயலாளர் குழுவின் செயலாளராக நடவடிக்கை மேற்கொள்கின்றார். 2017 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் 41 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், நிதி அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தகம், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை, புதுப்பிக்கத்தக்க சக்திகள், பெருந்தெருக்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் தொடர்பான 833 கொள்கையளவிலான தீர்மானங்கள் / பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.2 பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக பிரதம அமைச்சர் 2015.10.09 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவை நியமித்தார். இலங்கையின் மொத்தப் பொருளாதாரத் துறைக்கும் கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்கும் முக்கிய நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் இக் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**குழு அங்கத்தவர்கள்:-**

- திரு. ஆர் பாஸ்கரலிங்கம் — சிரேஷ்ட ஆலோசகர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு (தலைவர்)
- திரு.ஜே. சரித்த ரத்வத்தே — பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர்
- திரு.சுமித் அபேசிங்க — அமைச்சரவைச் செயலாளர்
- கலாநிதி திரு ஆர் எச் எஸ் சமரதுங்க — செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

- திரு. சாந்த பண்டார — செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
- திரு.அத்துல செனவிரத்ன — ஆலோசகர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
- திரு.சமன் வடுகே — மேலதிக செயலாளர், பிரதம அமைச்சர் அலுவலகம்

**குழுவின் அலுவல்களாவன;**

1) பொருளாதார அலுவல்கள், அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆய்வு செய்து அது தொடர்பாக பரிந்துரைகளை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பித்தல்.
2) தனியார் துறை முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் பல்வேறு செயற் திட்ட அறிக்கைகள் தொடர்பாக பொருத்தமான கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்குதல்.
3) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் கவனத்திற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
4) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள்.

2017.01.01 ஆம் திகதி முதல் 2017.12.31 வரை இக் குழுவின் 53 கூட்டங்கள் நடாத்தப்படுள்ளது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினால் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை நிருபங்கள் உட்பட 581 கோரிக்கைகளுக்கு இக் குழுவினால் அவதானிப்பு, சிபாரிசு மற்றும் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளது.

## 2.3 நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி துரிதத் திட்டம்

**"60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐம்பெரும் திட்டத்"தின்** பிரகாரம் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் திரு. பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையில் பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு.ஜே.சரித்த ரத்வத்தே உட்பட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற் குழுவினால் வீடமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான காணிகள், குழாய் நீர், மின்சாரம், பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தை துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

அரச மற்றும் தனியார் துறை இணைந்து (Public Private Partnership) நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக இதுவரை 06 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| **இல.** | **திட்டம்** | **வீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | நுககஹ கனத்தவத்த - பானதுறை | 196 |
| 02 | தம்புவாவத்த - ராகமை | 124 |
| 03 | வெரெல்லவத்த லங்காலோக காணி - யக்கலை | 669 வீடுகள் மற்றும் சந்தைத் தொகுதி |
| 04 | இஸ்காகாரவத்த - குண்டசாலை | 340 |
| 05 | மவுன்ட் கிளிபர்ட்வத்த - ஹோமாகமை | 600 |
| 06 | ஜல்த்தர கட்டம் II - ஹோமாகமை | 352 |

மேலும், பயனாளிகளுக்கு வீடுகளை விற்பனை செய்யும் விலைகளையும் அரசாங்கமே தீர்மானிக்கும். அத்துடன் பயனாளிகளுக்கு வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக சலுகை வட்டி அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.4 உத்தேச கிராம அரசு (கிராம ராஜ்ய) வேலைத் திட்டம்

கிராமிய பிரதேசங்களின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்தி, சமூக நலனோம்புகை, சொத்துரிமையை உறுதிப்படுத்தல் போன்ற எண்ணக்கருக்களின் ஊடாக கிராம அபிவிருத்தி செயற்பாடுகளை முறைப்படுத்தி தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஐம்பெரும் கொள்கைக்கமைய கிராம அரசு அலகுகள் எனும் பெயரில் 2500 கொத்தணிக் கிராமங்கள் தாபிக்கப்படும்.

உத்தேச திட்டத்திற்கமைய, கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 03 அல்லது 04 இனை ஒன்றிணைப்பதன் ஊடாக கிராம அரசு அலகொன்று தாபிக்கப்படும். "கிராமீன் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு"வின் கீழ் முழுமையான பொருளாதார மத்திய நிலையங்கள் இந்த கொத்தணிக் கிராமங்களில் தாபிக்கப்படுவதுடன், கிராமத்தின் நிர்வாக நடவடிக்கைகளை அந்தக் கிராமவாசிகளே மேற்கொள்வார்கள். ஒரு பிரதேச செயலாளர் பிரிவினுள் 08 அல்லது 10 வரையிலான கிராம அரசு அலகுகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் இந்த நிர்வாகப் பிரிவானது ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் துணை சேவைகள் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு கிராமங்களுக்கும் தேவையான நிதி ஏற்பாடுகளை மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**கிராம அரசு அலகுகளின் நோக்கம்;**

- நாட்டின் நிலையான சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் போன்ற பிரிவுகளின் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துமுகமாக உள்ளூர் பிரஜைகளின் பங்கேற்பை செயற்பாடுமிக்க மற்றும் அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தி நிச்சயிக்கப்பட்ட பிரதேசத்தினுள் நிறுவனப் பொறிமுறையொன்றாக செயற்படுவதற்கு வாய்ப்பளித்தல்;
- சிறப்பாக பாதுகாக்கப்பட்ட மற்றும் இயற்கை வளங்களைக் கொண்ட சூழல், ஆரோக்கியமான மக்கள், கற்ற மக்கள், சமூக உபசரணை மற்றும் நீதி நிலைநாட்டப்படும் சமூகம், பொருளாதார செழிப்பு, உயர் தரமான உற்பத்திக் கொள்ளளவு, சமூக ஒற்றுமை, சேவைகளை வழங்குதல் மற்றும் பயன்பாடு போன்ற காரணிகளைக் கொண்ட உறுதியான சமூகமொன்றினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்;
- பிரதேசத்தின் அபிவிருத்தியுடன் தொடர்பான மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக குரல் கொடுத்து பிரஜைகள் மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான சாதகமான தொடர்பை

ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்குதல் மற்றும் பரஸ்பர ரீதியில் பயன்மிக்க பின்னூட்டல் பொறிமுறையொன்றை உருவாக்குதல் ;

2500 கிராம அரசு அலகுகளை தாபிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட எண்ணக்கருத்தியல் பத்திரம் அமைச்சரவையின் அவதானிப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையினால் பாராளுமன்றத்தின் உள்ளக நிர்வாகம் மற்றும் அரச முகாமைத்துவம் சம்பந்தமான துறை சார்ந்த மேற்பார்வை குழுவின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, துறை சார்ந்த மேற்பார்வை குழுவின் அவதானிப்புக்களுடன் மீண்டும் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அந்த கிராம அரசு எண்ணக்கருத்தியல் பத்திரத்தை பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 2.5 உத்தேச அரச சேவைகள் வழங்கல் அதிகார சபை

பயன்மிக்க அரச சேவையை உறுதிப்படுத்துமுகமாக அரச சேவைகள் வழங்கல் அதிகார சபையை தாபித்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக பல்துறை கற்றறிந்தோர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக் குழுவினால் வெளியிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட அதிகார சபையை தாபிப்பதற்கான சட்ட மூலத்தை வரைவதற்காக சொலிஷிட்டர் ஜெனரலின் தலைமையில் கற்றறிந்தோர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு சட்ட மா அதிபர், சட்ட வரைஞரின் பிரதிநிதிகள், ஜனாதிபதி செயலகம் மற்றும் பல்வேறு அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ளது.

**அரச சேவை வழங்கல் அதிகார சபையினை தாபிப்பதன் முக்கிய நோக்கம்;**

- மக்களை மையமாகக் கொண்ட அரச சேவையொன்றை உறுதிப்படுத்தல்
- பொது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வினைத்திறன்மிக்க, சிறந்த உயர் தரமான சேவையை பொது மக்களுக்கு வழங்கும் விதத்தில் அரச சேவையை மற்றும் அரச நிறுவனங்களை வழிநடாத்தல்
- அரச துறை ஊழியர்களை ஊக்குவித்தல், அவர்களது செயற் திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் அவர்களுக்கு பயிற்சி அளித்தல்
- காலத்தின் தேவைகளின் அடிப்படையில் பொருத்தமான சேவைத் தரங்களை தாபித்தல் மற்றும் அதனுடன் இயைந்து செல்வதற்காக அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- சகல அரச சேவைகளுக்கும் பக்கச்சார்பற்ற மற்றும் நீதியான பிரவேசத்தை ஏற்படுத்தல் மற்றும் சேவை பெறுநர்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்
- வினைத்திறன்மிக்க மற்றும் பொது மக்கள் நட்புறவுச் சேவையொன்றின் நிமித்தம் பிரஜைகள் - சேவை பெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்

நியமிக்கப்பட்ட கற்றறிந்தோர் குழுவினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் அவதானிப்புக்காக அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையினால் பாராளுமன்றத்தின் உள்ளக நிர்வாக மற்றும் அரச முகாமைத்துவம் சம்பந்தமான துறை சார்ந்த மேற்பார்வை குழுவின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டு அக் கருத்துக்களை அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சட்ட வரைஞர் ஆரம்ப வரைவை மேற்கொண்டு வருகின்றார்.

## 2.6 GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளல்

2009 மே மாதம் நாட்டில் நிலவிய மோதல் நிலைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, உரிமைகள் மற்றும் அபிவிருத்தி பாதுகாக்கப்பட்ட நிலைமையொன்றை நிலைநிறுத்திக்கொள்ளும் நடவடிக்கையில் இலங்கை பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், அதன் பின்னர் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக, ஐரோப்பிய யூனியன் மற்றும் இலங்கைக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடல் சம்பந்தமாக ஐரோப்பிய யூனியனால் 2010 ஜூன் 17 ஆம் திகதி அன்றைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, GSP+ சலுகை நன்மையை பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை கவனம் செலுத்த வேண்டிய ஆனாலும் தீர்க்கப்படாத 15 சிக்கல்கள் சம்பந்தமாக அந்த எழுத்து மூல அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2016.07.12 ஆம் திகதி அந்த 15 சிக்கல்களின் கீழ், விண்ணப்பத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை உண்மையிலேயே தேவையான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதனை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான தகவல்களை முன்வைக்குமாறு ஐரோப்பிய யூனியன் இலங்கையிடம் கேட்டுக்கொண்டது. நிலவும் ஏற்பாடுகளின் கீழ் அந்த விண்ணப்பத்தை பகுப்பாய்வு செய்வதற்கு மற்றும் ஏற்புடையதாகும் அளவுகோல்களை நிறைவு செய்திருப்பின் இலங்கைக்கு GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கான பிரேரணையை முன்வைப்பதற்கு 2016.07.12 ஆம் திகதி முதல்

2017.01.12 ஆம் திகதி வரையிலான 06 மாத கால அவகாசம் ஐரோப்பிய யூனியனுக்கு இருந்தது.

58 செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்ட கால இடைவெளியுடன் 2016 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட விபரங்களை ஒப்படைக்குமாறு ஐரோப்பிய யூனியனால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, 58 செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் 2016 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி பிரதம அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் முன்வைக்கப்பட்ட பதிலளிப்புக்களுடன் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஐரோப்பிய யூனியனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாக உரிய தரப்பினருடன் பல முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் பிரதம அமைச்சரின் செயலாளரது தலைமையில் நடைபெற்றதுடன், இது தொடர்பான மேலும் கலந்துரையாடுவதற்காக பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், 2016 ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பிரசல்ஸில் ஐரோப்பிய யூனியனின் தலைவர்கள் மற்றும் தூதுவர்களைச் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டார். இந்த முயற்சிகளின் பெறுபேறாக 2017 மே மாதம் 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் GSP+ சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்கினாலும் ஐரோப்பிய யூனியனின் விதிமுறைகளுக்கமைய ஒரு நாட்டிற்கு GSP+ சலுகையை வழங்கியதன் பின்னர் நன்மையடைபவர் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.6.1 பொதுவான பெறுகை தீர்வை வரித் திட்டம் (GSP+) கண்காணிப்பு பொறிமுறை

GSP+ சலுகை தொடர்பான பொறுப்புக்கூறலுக்கு உட்படுவதற்காக உள்ளக செயல் முறையொன்றை தாபிப்பதற்கான தேவை நிலவியமையினால் இலங்கை அரசாங்கத்தினால் அமைச்சர்கள் குழுவொன்று, தேசிய மட்டத்திலான செயற் குழுவொன்று மற்றும் மனித உரிமைகள், தொழிலாளர், சூழல் மற்றும் நிர்வாகம் என நான்கு கொத்தணிக் குழுவைக் கொண்ட கண்காணிப்புப் பொறிமுறையொன்றை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
27 சர்வதேச சாசனங்களுடன் இணங்கிச் செல்லும் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் தலைமையில் அமைச்சர் குழுவொன்று மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரது தலைமையிலான தேசிய செயற் குழுவொன்றை கௌரவ பிரதமர் நியமித்துள்ளார். சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கொத்தணக் குழுக்களுக்கு தலைமை வகிப்பதுடன் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு GSP+ சலுகை தொடர்பான தேசிய மையமாக செயற்படுகின்றது.

27 சர்வதேச சாசனங்களுடன் இணங்கிச் செல்லும் நடவடிக்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக ஐரோப்பிய யூனியனின் GSP+ சலுகை நடைமுறையின் அதிகாரத்தின் பிரகாரம், ஐரோப்பிய யூனியனின் தூதுக் குழு இடைக்கிடை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார்கள்.

ஐரோப்பிய யூனியனின் முதலாவது தூதுக் குழுவினர் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாவது வாரத்தில் இலங்கைக்கு வருகை தந்ததுடன் GSP+ சலுகை தொடர்பான தேசிய மையம், 04 கொத்தணிக் குழு என்பவற்றுடன் சில கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் கௌரவ பிரதமருடனும் கலந்துரையாடலை நடாத்தினர். மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றம் சம்பந்தமாக கொத்தணிக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய யூனியனின் தூதுக் குழுவினர் திருப்தி கண்டனர்.
ஐரோப்பிய யூனியனின் அடிப்படை நோக்கம், நிரல் முகவர் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்து இலங்கையுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்பை வழங்குவதனை உறுதிப்படுத்தி அவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதனை துரிதப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகும்.

## 2.7 ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை ஒன்றிணைப்பதற்கான அமைச்சரவைக் குழு

2015 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கத்தினால் தேசிய நல்லிணக்கம், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சட்டம் மற்றும் நல்லாட்சியை வழிப்படுத்தல் மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு முக்கிய மாற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பின் கட்டமைப்புடன் விசேடமாக நல்லிணக்கத்தை விருத்தி செய்தல், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையுடன் மீண்டும் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவை (UNHRC) 2015 இன் 30/1 ஆம் இலக்க இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விதிமுறையை அங்கிகரித்துக்கொண்டதுடன், இந்த விதிமுறைகள் மீது இணை அனுசரணை வழங்கி இலங்கை அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2017 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வின்போது 2015 இன் 30/1 ஆம் இலக்க விதிமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்ற வேண்டிய இணக்கப்பாடுகளை செயற்படுத்துவதற்காக

மீண்டும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், அதற்கமைய, இலங்கை இரண்டு வருட காலத்திற்கு 34/20 எனும் விதிமுறைக்கு மீண்டும் இணை அனுசரணை வழங்கியது.

அதற்கமைய, மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை கால அட்டவணைக்கமைய செயற்படுத்துவதற்காக மைய ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைக்காக அமைச்சரவையினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் கீழ் குறிப்பிடப்படும் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

- கௌரவ திலக் மாரப்பன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.
- கௌரவ மங்கள சமரவீர, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
- கௌரவ மஹிந்த சமரசிங்க, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்
- கௌரவ சுசில் பிரேமஜயந்த, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்
- கௌரவ சாகல ரத்னாயக்க, சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்
- கௌரவ தலத்தா அத்துகோரள, நீதி மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர்
- கௌரவ ருவன் விஜேவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
- கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**மேற்குறிப்பிடப்பட்ட பிரதான குழுவுக்கு உதவி வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்படும் உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

- பிரதம அமைச்சரின் செயலாளர் (தலைவர்)
- செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
- செயலாளர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
- செயலாளர், நீதி அமைச்சு
- செயலாளர், சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு
- திரு.நெரின் புள்ளே, பிரதி சொலிஷிட்டர் ஜெனரல், சட்ட மா அதிபர் திணைக்களம்
- திருமதி சந்திமா விக்ரமசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்

மேற்பார்வை பணியாட் தொகுதி, 2015 இன் 30/1 ஆம் இலக்க இணக்கப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வை அலுவல்களை கண்காணிப்புக்குட்படுத்தும் அலுவலை மேற்கொள்வதற்காக பிரதான இரண்டு பிரிவுகளாக பிரித்துள்ளது. அதாவது; இடைக்கால நீதிப் பொறிமுறைகள் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மற்றும் மீண்டும் நிகழாதிருப்பதனை உறுதி செய்துகொள்வதற்கான நடவடிக்கைகள் என்பனவாகும்.

அமைச்சர்கள் குழு உத்தியோகத்தர் குழுவுடன் கலந்துரையாடலொன்றை நடாத்தியதுடன், குறிப்பிட்ட இரண்டு வருட காலத்தினுள் எஞ்சியுள்ள நடவடிக்கைகள் அனைத்தையும் வேகமாக நிறைவேற்றுவதற்கு தீர்மானித்துக்கொள்ளப்பட்டது. உத்தியோகத்தர்களைக் கொண்ட உப குழு சட்ட ரீதியிலான திருத்தங்கள், காணிகளை விடுவித்துக்கொள்ளல் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக சிறப்பான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றது.

## 2.8 தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2017-2021

போரின் பின்னரான இலங்கையில் அபிவிருத்தி மற்றும் நீதியை அடைந்து கொள்வதற்கான உரையாடலில் மனித உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் ஒப்புதல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மனித உரிமை இணக்கப்பாடுகள் மற்றும் சுய பிரகடனங்களை அமுல்படுத்துவதன் முக்கியத்துவம் இலங்கை அரசினால் இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, மனித உரிமைகளை மேலும் மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை விரிவுபடுத்துவதற்காக, 2017 – 2021 ஆண்டுக்கான தேசிய மனித உரிமைகள் செயல்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டடுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட விரிவான தரப்பினருடன் கலந்துரையாடித் தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டம், 2017 – 2021 காலப்பகுதியினுள் மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் நோக்கினை வெளிப்படுத்துகிறது.

2010 ஒக்டோபர் மாதம் 03 ஆந் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கு ஏற்ப தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தை இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடனமாகக் கருதி அதில் உள்ளடங்கியுள்ள அம்சங்களை ஏற்புடைய காலப்பகுதிகளினுள் அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயல்திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையிலான அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. 2017 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அந்த அமைச்சரவைக் குழுவின் முதலாவது கூட்டத்தில்

தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

உரிய காலப்பகுதியினுள் செயல்திட்டம் பெற்றுக்கொண்ட முன்னேற்றம், அதன் செயற்பாடு தொடர்பாக அவ்வப்போது அமைச்சர்களைக் கொண்ட குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்நாயக்க அவர்களின் வழிகாட்டலுடன் கூடிய ஓர் அதிகாரிகள் குழுவும் நியமிக்கப்பட்டதுடன் அந்தக் குழுவின் தலைவராக பிரதம அமைச்சரின் செயலாளர் செயற்படுகிறார். செயல்திட்டத்தின் அத்தியாயம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள 10 பிரதான அம்சங்களின் செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் அமைச்சுக்களின் செயலாளர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர்களையும் அதிகாரிகள் குழு உள்ளடக்கியுள்ளது.

தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தின் பிரதான 10 அம்சங்களினதும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுக்கள் மாதாந்தம் ஒன்றுகூடி அதன் முன்னேற்றத்தினை அதிகாரிகள் குழு மற்றும் அமைச்சர்களைக் கொண்ட குழுவுக்கு அறிக்கையிடும். சிவில் அமைப்புக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான ஒருங்கிணைப்புச் செயலகம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவற்றின் பிரதிநிதிகள் இந்த துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வர்.

பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான ஒருங்கிணைப்புச் செயலகம் ஊடாக தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தின் செயற்பாடுகளை ஆராய்ந்து, அதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக அதிகாரிகள் குழுவினதும் அமைச்சரவைக் குழுவினதும் கவனம் ஈர்க்கப்படுகிறது.

## 2.9 இரண்டாவது இந்து சமுத்திர மாநாடு - 2017

இரண்டாவது இந்து சமுத்திர மாநாடு (IOC 2017) இலங்கையில் நடாத்தப்பட்டதுடன் இலங்கையின் பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் இந்திய அமைப்பு அதன் தரப்பினரான சர்வதேச மற்றும் மூலோபாயத்திற்கான பங்களாதேஷ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் எஸ்.ராஜரத்னம் சர்வதேச பாடசாலையுடன் இணை அனுசரணை வழங்குகின்றது. இந்த கருத்தரங்கு இலங்கையின் பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க

அவர்களின் தலைமையில் 2017 ஆகஸ்ட் மாதம் 31 அம் திகதி முதல் செப்டெம்பர் 01 ஆம் திகதி வரை அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

இந்த 2017 இந்து சமுத்திர மாநாடு இந்தப் பிராந்தியத்தின் சகல தரப்பினரையும் ஒரே மேடைக்கு கொண்டு வந்ததுடன் அங்கு சமாதானம், முன்னேற்றம் மற்றும் சௌபாக்கியத்தை அடைந்துகொள்வது எப்படி என்பது சம்பந்தமாக இணக்கப்பாடு எற்படுத்திக்கொள்ளப்பட்டது.

சீஷெல்ஸ் குடியரசின் உப ஜனாதிபதி, இந்தியவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், பங்களாதேஷின் வர்த்தக அமைச்சர், சிங்கப்பூரின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உப அமைச்சர் மற்றும ஐக்கிய அமெரிக்க குடியரசின் பதில் உதவிச் செயலாளர் திருமதி எலிஸ் வெல்ஸ் உட்பட்ட சிறப்பு தலைவர்கள் மற்றும் பிரபல அரச பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். பிராந்தியத்தின் 40 இற்கும் அதிகமான நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 300 இலும் அதிகமானோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.





இந்த மாநாடு, மூன்று ஆரம்ப செயலமர்வுகள், ஆரம்ப அமர்வு, சமாதானத்துடன் தொடர்பான 02 அமர்வுகள், முன்னேற்றம் மற்றும் சௌபாக்கியம் சம்பந்தமான ஒரு அமர்வு என்பவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்ற இறுதி அமர்வுடன் இந்த மாநாடு நிறைவு பெற்றது.

**அங்கு கீழ் குறிப்பிடப்படும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன.**

- இந்து சமுத்திரத்தை பாதுகாத்துக்கொள்ளல் மற்றும் அனுமதியின்றிய நுழைவுகளிலிருந்து சுதந்திரமாக இருத்தல் வேண்டுமென இந்து சமுத்திரத்திற்குரிய அனைத்து நாடுகளைப் போன்றே இந்த சமுத்திரத்தின் பங்காளித் தரப்பினர்களால் இந்த மாநாட்டின்போது ஒருமித்த இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. இந்து சமுத்திரத்தில் சமுத்திரம் சார்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய அலுவல்களை மேற்கொள்வதற்கான சட்ட ரீதியிலான திட்டமொன்றை தயாரித்தல்.
- சில அரச செயற்பாடுகளின் ஊடாக உதவிபெறும் கடல் கொள்ளைகள், சட்ட விரோத போதைப் பொருட் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல்கள், சட்ட விரோத மீன் பிடி நடவடிக்கைகள், விஞ்ஞான பூர்வமான அடிப்படைகளற்ற சமுத்திர வளங்கள் பற்றிய ஆய்வுகள் மற்றும் அகழ்வுகள் மற்றும் பயங்கரவாதத்தின் பரம்பல் இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் முகங்கொடுக்கும் முக்கிய சவால்கள் என்பதனை இனங்கண்டுகொள்ளப்படல்.

## 2.10 கொள்கை உருவாக்கல் அலுவலகம்

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்கினை துரிதமாக அடைந்து கொள்வதன் நிமித்தம் தெளிவான, ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நியாயமான கொள்கைகளை உருவாக்கும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி ''கொள்கை உருவாக்கல் அலுவலகம்'' பிரதம அமைச்சர் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்தின் அலுவல்களை துரிதப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் இந்த கொள்கை உருவாக்கல் அலுவலகத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- தேசிய கொள்கைகளை திட்டமிடல், உருவாக்குதல்
- கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அலுவலை ஒருங்கிணைத்தல்
- கொள்கைகள் பற்றிய மீளாய்வு மற்றும் மதிப்பீடு
- இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் மீதான வெளிவாரியான காரணிகளின் அழுத்தம் பற்றிய மீளாய்வு

இந்த அலுவலகத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் குழுக்கள் மற்றும் உப குழுக்கள் செயற்படுத்தப்படுவதுடன் 2017 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதிக்கான செயற் திறன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1. தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக் குழு

### I முதியோர் உபசரணை கொள்கை உப குழு

- ஹெல்பேஜ், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் உதவியுடன் பத்தேகம, மாவனெல்ல மற்றும் கிளிநொச்சியில் முதியோர் உபசரணை உதவியாளர் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.
- தேசிய முதியோர் செயலகம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயலகத்திற்காக முகாமைத்துவ செயல்முறைகள் உட்பட சேவை பெறுநர்களின் விபரங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் இயங்கும் முதியோர் இல்லங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்குவதற்காக இணையத்தளமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### II சிறுவர் உபசரணை கொள்கைகள் உப குழு

- அமைச்சரவை 2017 ஜூலை 25 ஆம் திகதி சிறுவர் உபசரணை வழிகாட்டலை அங்கீகரித்துள்ளது.
- இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான பாடநெறியை நடாத்துவதுடன், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டில் முதலாவது குழு தமது பாடநெறியை நிறைவு செய்துள்ளனர்.

### III பாடசாலைகளில் தொழிற் பயிற்சியை வழங்குவதற்கான கொள்கை உப குழு

- தொழில்நுட்ப பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கருகில் அமைந்துள்ள 36 பாடசாலைகளில் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் NVQ 4 மட்டத்திற்குரிய பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### IV சுற்றுலாத்துறைப் பாடநெறி மற்றும் பயிற்சியளித்தல் சம்பந்தமான கொள்கை

- TVEC மற்றும் SLITHMஇணைந்து சுற்றுலாத்துறையின் நிபுணத்துவ மட்டத்திலான பாடநெறிகளுக்காக தேசிய பாடத் திட்டங்கள் (NVQ Level-3/4) தயாரிக்கப்பட்டுள்ளன.

## V அங்கவீனர்களுக்கான கொள்கைகள் பற்றிய உப குழு

- 2017 ஆம் ஆண்டிற்காக நிறுவனம் சார்ந்த சமூகப் பொறுப்புக்கள் விருது வழங்கும் விழாவில் நிறுவனம் சார்ந்த பிரஜைகள் மற்றும் வலுவாதாரத்திற்கான விருதுக்காக (BCCS) இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் (CCC) அங்கவீனர்களுக்கும் (மாற்றுத் திறனாளிகள்) சம தொழில் வாய்ப்புக்களை வழங்கி தெரிவு செய்வதற்கான அளவுகோல்களை உள்ளடக்கப்பட்டுள்ளது.
- தொழில் அமைச்சினால் http://pwds.observerjobs.lk/ இணையத் தளத்தின் டோமின் நாமத்தின் உரிமை கொள்கை உருவாக்கல் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- அரசாங்க நிறுவனங்களின் வெளிக் கள உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறை கம்பனிகளுக்காக முதலாவது ”பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம்” நிகழ்ச்சித் திட்டம் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டது.
- 2017 டிசம்பர் 21 ஆம் திகதி களணிப் பல்கலைக்கழகத்தினால் அங்கவீன நபர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சிக்கான வாய்ப்பை வழங்குவதற்கான செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அது தவிர, கொள்கை உருவாக்கல் அலுவலகம் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்கள் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைப் பொறிமுறையடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்றது.

நிர்மாணங்கள் தொடர்பான கொள்கை, பெண்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சி சம்பந்தமான உப குழு, சூரிய சக்தித் திட்டம், வர்த்தகம் பொருத்தப்பாட்டு கொள்கை மீளாய்வு, உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கொள்கை, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பயிற்சி சட்டக் கொள்கை மீளாய்வு, வட பகுதி அபிவிருத்தி கொள்கை, நீதிமன்றங்களில் இலத்திரணியல் கோவைப்படுத்தல் கொள்கை, பாதுகாப்பு மற்றும் வலையமைப்புக் கொள்கை, தரவுக் களஞ்சியசாலையை உருவாக்குவதற்கான உப குழு, தனியார் உடல் நலப் பாதுகாப்புக் கொள்கை, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி சம்பந்தமாக அறிவுறுத்தல் திட்டம், சாகச சுற்றுலாப் பயணம் மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை, திவால் சட்டம், அரச காணிகள் வங்கி (e – SLIMS) கொள்கை , உடல் நலப் பாதுகாப்பு உடல் நலக் காப்புறுதிக் கொள்கை, தேசிய கணக்காய்வுக் கொள்கை, முதலீடுகள் விசேட ஏற்பாடுகள் கொள்கை, சீகிரியாவின் அதி - சுற்றுலாப் பயணத்தை தவிர்க்கும் கொள்கை, யால - அதி - சுற்றுலாப் பயணத்தை தவிர்க்கும் கொள்கை, நாடளாவிய சேவைகளின் இடைச் செயற்பாடுகள் மனித வளங்கள் தரவுத் தொகுதி கொள்கை, உள்நாட்டு சிவில் விமான சேவைகள் பற்றிய கொள்கையுடன் தொடர்பான பிரச்சினைகள், வர்த்தகப் பதிவேடு, முதனிலை உபசரணைக் கொள்கை, சிவில் விமான சேவைகள் கொள்கை, தொழில் வழிகாட்டி சம்பந்தமான கொள்கை, தேசிய இளைஞர் படையணி

மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கான செயற்திறன் குறிகாட்டி, ஊழியத்திற்கான கேள்வி பற்றிய மதிப்பீடு, பகல் நேர பராமரிப்புக் கொள்கை, அரச சேவை மறுசீரமைப்பு, வாரச் சந்தை அபிவிருத்தித் திட்டம், பெண்கள் தொடர்பான கொள்கை

## 2.11 கல்வி மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட குழு

கடந்த ஆண்டில் கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் மற்றும் கல்வியமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் உட்பட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் கல்வி மறுசீரமைப்பு சம்பந்தமாக பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் அதில், 13 வருட காலக் கல்வியை உறுதிப்படுத்தல், பாடசாலை கல்வி பற்றிய ஆய்வு நிலையங்களை தாபித்தல், பாடசாலை சபைகளை தாபித்தல், ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் முறையை முறைப்படுத்தல், தேசிய கல்வி நிறுவகத்தை மறுசீரமைத்தல், தேசிய ஈ - நூலகத்தை நிறுவுதல் போன்ற கல்வி சார்ந்த மறுசீரமைப்பு பிரேரணைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. அந்த பிரேரணைகளிடையே 13 வருட காலக் கல்வியை உறுதிப்படுத்தல், பாடசாலை கல்வி பற்றிய ஆய்வு நிலையங்களை தாபித்தல் போன்ற பிரேரணைகளை நடைமுறைப்படுத்த தயார்நிலையில் இருப்பதுடன் எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

## 2.12 தேசிய ஊடக மத்திய நிலையம்

தேசிய ஊடக மத்திய நிலையமானது ஊடக அலுவல்களுடன் தொடர்பான அரசாங்கத்தின் பிரதான செயற்பாட்டு நிறுவனமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. ஊடக கண்காணிப்பு, ஊடக மற்றும் அரசியல் பற்றிய பகுப்பாய்வு நடவடிக்கைகள், ஊடக மதிப்பீடு இதன் முக்கிய அலுவல்களாகும். அது தவிர, அரசாங்கத்தின் பல்வேறு செயற் திட்டங்களுடன் தொடர்பான தகவல்களை திரட்டல் மற்றும் அவை உள்ளடக்கப்பட்ட அறிக்கைகளை தயாரித்தல் ஏனைய அலுவல்களாகும்.

- **ஊடக அறிக்கைகள் சம்பந்தமான பின்னூட்டல் நடவடிக்கைகள்**

இந்த நாட்டின் இலத்திரணியல், அச்சு மற்றும் புதிய ஊடகங்கள் பற்றிய கண்காணிப்பு நடவடிக்கைகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் 18 பத்திரிகைகள், 10 தொலைக்காட்சி அலைவரிசைகள், 05 வானொலி அலைவரிசைகள், சமூக ஊடகங்கள், இணையத் தளங்களை கண்காணிப்புக்குட்படுத்தி அவற்றின் உள்ளடக்கம் தொடர்பா அறிக்கைகள் போன்றே பகுப்பாய்வு அறிக்கைகளும் தயாரிக்கப்படுகின்றன. அவை உரிய

பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு தினந்தோறும் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதன்போது அரசாங்கத்தினால் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்ட விசேட நிகழ்வுகள் மற்றும் அதன் அடிப்படையிலான காரணங்கள் சம்பந்தமாக பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

- **ஊடக மற்றும் அரசியல் பகுப்பாய்வு / அரசியல் ஆய்வு**

ஊடக கண்காணிப்பு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு விடயங்களடன் தொடர்பான சுமார் 100 ஆய்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டு தற்போது உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தவிர கபினட் பத்திரிகையாளர் மாநாட்டின்போது ஊடகவியலாளர்களினால் எழுப்பப்படக்கூடிய கேள்விகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்களை சேகரித்தல், அவற்றுடன் தொடர்புடைய மேலதிக தகவல்களை துரிதமாக வழங்கப்பட்டுள்ளன.

அது தவிர அரசாங்கத்தின் விசேட கருத்திட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், தகவலறியும் சட்டம், நல்லிணக்கத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நடவடிக்கைகளின்போது முனைப்பான பங்களிப்பை வழங்கி அதற்குத் தேவையான பின்புலத் தகவல்களை வழங்குதல், எதிர்காலப் போக்கு சம்பந்தமான எதிர்வுகூறல் அறிக்கைகளைத் தயாரித்தல் போன்ற அலுவல்களில் ஈடுபடுகின்றது. முக்கியமாக இதுவரை காணாமற்போனோர் பற்றிய செயலகச் சட்டம், சயிட்டம் பிரச்சினை, அவசர அனர்த்த நிலைமைகள், அரசியல் யாப்பு உருவாக்கம், வரவு செலவுத் திட்டம் போன்ற நடவடிக்கைகளின்போது தேவையான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

# 03. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு

## 3.1 பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்

உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, தொழிநுட்ப விஞ்ஞான அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கள், ஏனைய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும், சர்வதேச அலுவல்கள் தொடர்பான தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்காகவும் பிரதம அமைச்சர் அவர்கள் 2017 இன் ஆரம்பப் பகுதியில் பல வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டார். இந்து சமுத்திரத்தின் பொருளாதார மற்றும் வணிக கேந்திர நிலையமாக நாட்டை முன்னேற்றுதல், 2030 ஆகும்போது இலங்கையை உயர் வருமானமுடைய நாடாக உயர் தரப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும் என அரச தலைவர்களுடன் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடல்களின்போது பிரதம அமைச்சர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார, அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் எமது நாடு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாய் அமைந்த அந்த உத்தியோகபூர்வ விஜயங்கள் தொடர்பான சுருக்கமானதோர் விளக்கம் கீழே காணப்படுகிறது.

### 3.1.1 2017 ஜனவரியில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாடு

அரசியல், நிதி, வணிகம், பொருளாதாரம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகள் சார்ந்த உலகத் தலைவர்கள் 3000 பேர் அளவில் கலந்துகொண்ட சுவிற்சர்லாந்தின் டவோஸ் நகரில் இம்பெற்ற 47 ஆவது உலக பொருளாதார மாநாட்டில் பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர். அங்கு கௌரவ பிரதம அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் "தெற்காசியாவில் பிராந்திய ஒத்துழைப்பு" எனும் தலைப்பில் விசேட உரையொன்று பிரதம அமைச்சினால் நிகழ்த்தப்பட்டது. இந்த விஜயத்தின்போது பிரதம அமைச்சர் அவர்கள் அரசியல் மற்றும் வர்த்தகத் தலைவர்கள் பலருடன் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இலங்கைக்கு கீழ்வரும் துறைகளில் உதவியைப் பெற்றுக் கொள்ள இக்கலந்துரையாடல்கள் பெரிதும் காரணமாய் அமைந்தன.

- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குத் தேயையான உதவிகள் மற்றும் கடன் வசதிகளை வழங்குவதற்கான வாய்ப்பு தொடர்பாக ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முதலீட்டு வங்கியினால் வெளிப்படுத்தப்பட்டது.
- இலங்கையின் கல்வி முறைமையை அபிவிருத்தி செய்ய உதவியளிக்கவும் சுஹுரு வகுப்பறைகள் கருத்திட்டத்தை ஆரம்பிக்கவும் மைக்ரோசொப்ட் நிறுவனம் இணக்கம் தெரிவித்தது.







### 3.1.2 2017 பெப்ரவரி – அவுஸ்திரேலியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம்

அவுஸ்திரேலிய அரசின் அழைப்பின் பேரில் பிரதம அமைச்சர் அவர்கள் 2017 பெப்பரவரி மாதம் அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். இரு நாடுகளுக்குமிடையிலான ராஜதந்திர உறவுகளின் 70 வருடப் பூர்த்தி இந்த விஜயத்தின்போது அடையாளப்படுத்தப்பட்டது. கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அவுஸ்திரேலியப் பிரதமர் கௌரவ மெல்கம் டர்ன்புல், வெளிநாட்டலுவல்கள், கைத்தொழில், குடிவரவு, முதலீடு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் போன்ற பிரதான துறைகளில் பொறுப்பு வகித்த அவுஸ்திரேலிய அமைச்சர்களுடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தின்போது பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பினை விருத்தி செய்வது தொடர்பாக இரு நாடுகளின் பிரதமர்களும் கலந்துரையாடினர். அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலக அலுவல்கள் தொடர்பாகப் பிரதம அமைச்சரின் கவனம் ஈர்க்கப்பட்டது.

பல்கலைக்கழகக் கல்வி, தகவல் தொழிநுட்பம், விருந்தோம்பல், பொறியியல் நுட்பம், தொழிநுட்ப மற்றும் தொழிற் கல்வி, சுற்றுலாக் கைத்தொழில் போன்ற துறைகளுக்குத் தேவையான உதவியை வழங்க அவுஸ்திரேலியப் பிரதமர் இணக்கம் தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்புத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக கீழுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டது.

- அபிவிருத்தி ஒத்துழைப்பு கூட்டுப் பங்களிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும்
- விளையாட்டுத் துறைகள் தொடர்பான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்





### 3.1.3 ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயம்

2017 ஏப்ரல் மாதம் ஜப்பானுக்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர் வியஜத்தின்போது, பிரதம அமைச்சர் அவர்கள் ஜப்பானியப் பிரதமர் அதிமேதகு சின்சொ அபே, பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரை சந்தித்து கலந்துரையடால்களை மேற்கொண்டார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமுத்திர ஒத்துழைப்பினைப் பலப்படுத்தல் தொடர்பான தமது திட்டங்களைப் பிரதம அமைச்சர் அவர்கள் இக்கலந்துரையாடலின்போது தெளிவுபடுத்தினார். அதற்கேற்ப, கண்டி மாநாகர சபை அபிவிருத்தித் திட்டம், கொழும்பு மேல் மாகாண பெருநகரத் திட்டம், இலங்கை முப்படையினரின் திறமையைப் பலப்படுத்தல் என்பவற்றுக்கு உதவியளிக்க அதிமேதகு சின்சொ அபே அவர்கள் இணக்கம் தெரிவித்தார்.திரவ இயற்கை வாயு மின் உற்பத்தி நிலையம்/ மிதக்கும் முனையம், டிஜிட்டல் வானொலி முறைமை தொடர்பாகவும் இந்த விஜயத்தின்போது கலந்துரையாடப்பட்டது. துறைமுக அபிவிருத்தி, போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய தேசிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பினைத் துரிதப்படுத்துவதற்கு இந்த விஜயம் இரு நாடுகளுக்கும் முக்கிய சந்தர்ப்பமாக அமைந்தது.





### 3.1.4 வியட்னாமுக்கான உத்தியோகபூர்வ விஜயம்

வியட்நாம் பிரதமர், கௌரவ குயொன் குசுவான் புக் அவர்களின் அழைப்பின் பேரில், 2017 ஏப்ரல் மாதம் 16 - 19 வரையான காலப்பகுதியில் விக்கிரமசிங்க அவர்கள் வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது, வர்த்தகம், முதலீடு மற்றும் அந்நியோன்ய முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் உட்பட பல்வேறுபட்ட துறைகளில் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவது தொடர்பாக வியட்நாம் ஜனாதிபதி அவர்களுடனும் பிரதமருடனும் பிரதம அமைச்சர் அவர்கள் லப கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக உயர் மட்ட இணைந்த ஆணைக்குழுவொன்றை நியமிப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்புத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக கீழுள்ள ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

- இலங்கையின் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வியட்நாமின் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சுக்கிடையே 2017 – 2020 காலப்பகுதிக்கான கல்வி ஒத்துழைப்பு ஒப்பந்தம் மற்றும்;
- இரு நாடுகளினதும் கமத்தொழில் அமைச்சுக்களுக்கிடையே அபிவிருத்தி ஒத்துழைப்பு மீதான 2017 - 2019 வருடங்களுக்கான செயல் திட்டம்





### 3.1.5 2017 ஏப்ரல் - இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2017 ஏப்ரல் மாத இறுதியில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அங்கு இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோதி அவர்களை சந்தித்தார். இந்த விஜயத்தின்போது, பல்வேறுபட்ட இரு தரப்புப் பிரச்சினைகள் தொடர்பாகவும், 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் கடந்த இரு வருடங்களினுள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட உயர் மட்ட இடைப் பரிமாற்றச் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றம் தொடர்பாகவும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர். இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை உறுதியாக செயற்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக பொருளாதார கருத்திட்டங்களுக்கான ஒத்துழைப்பு தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, விக்கிரமசிங்க அவர்கள் இந்திய உள்நாட்டலுவல்கள் அமைச்சர், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஆகியோருடனும் பல இரு தரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். மீனவர் சமூகப் பிரச்சினைகள், சாரணாத் காணிகள் மற்றும் மஹாபோதியின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள், இலங்கைப் பொலிசாருக்கும் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கும் பயற்சியளித்தல் ஆகிய விடயங்களும் இக்கலந்துரையாடலில் உள்ளடங்கியிருந்தன. அதேபோன்று வடக்கு வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் திட்டம் மற்றும் மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களைச் செயற்படுத்த உதவியளித்தல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.





### 3.1.6 2017 மே – சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற "ஒரே பாதை ஒரே இலக்கு" (One Belt One Road) மாநாடு

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள், சீன அரசின் அழைப்பின் பேரில் 2017 மே மாதம் 13 – 16 ஆந் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் நடாத்தப்பட்ட **"ஒரே பாதை ஒரே இலக்கு"** மாநாட்டில் கலந்துகொண்டார். இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் துறைமுக மற்றும் கைத்தொழில் வலயங்கள் அபிவிருத்தி, உத்தேச நிதியியல் நகர செயற்றிட்டம், மத்திய அதிவேகப் பாதை மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் என்பன தொடர்பாக சீன ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடல் மேற்கொண்டார். இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கு இலங்கைக்கு இது முக்கிய சந்தர்ப்பமாக அமைந்ததுடன், கல்வி, ஜீவனோபாயம், சுகாதாரத்

துறைகளின் அபிவிருத்திக்கு 400 மில்லியன் யுவானை வழங்க உடன்பட்டு, கீழ்வரும் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம்
- நாட்டிடம் ஒப்படைத்தல்( Extradition) தொடர்பான உடன்பாட்டு ஒப்பந்தம்
- முதலீட்டு பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பினை விரிவாகச் செயற்படுத்தல் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் சீனாவின் மூலதன ஒத்துழைப்பு சீன வங்கி (CBCC) ஆகியற்றுக்கிடையே விரிவான ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் அடிப்படையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கிடையிலான அனுசரனை ரீதியான கொள்வனவாளரின் கடன் ஒப்பந்தம்





### 3.1.7 2017 ஒக்டோபர் - பின்லாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயம்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் 2017 ஒக்டோபர் மாதம் 8 ஆந் திகதி முதல் 10 ஆந் திகதி வரை பின்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் இந்த விஜயத்தின்போது பின்லாந்தின் பிரதமர் ஜூஹா சிபிலி அவர்கள், பின்லாந்து சபாநாயகர், பாதுகாப்பு, பொருளாதார அலுவல்கள், சமூக அலுவல்கள் மற்றும் சுகாதார அமைச்சர்கள், நோடிக் இன்வெஸ்ட்மன்ட் வங்கியின் (NIB) பிரதிநிதிகள் மற்றும் பின்லாந்து கைத்தொழில் குழுவின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

இலங்கை தூதுக் குழுவினர் பின்லாந்தின் வளிமண்டலவியல் நிறுவனம் மற்றும் மேலும் பல தொழிற்சாலைகளுக்கு கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டனர். இந்த விஜயத்தின்போது பின்லாந்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கிடையே பின்லாந்தின் அரச துறை முதலீட்டு வசதியின் (PIF) கீழ் நிதி வழங்கும் கருத்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.
பின்லாந்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் கைத்தொழில் பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பின்பு கீழுள்ள தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- A W எனர்ஜி நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் கடல் அலைகள் ஊடாக எரிசக்தியை உற்பத்தி செய்வது தொடர்பான முன்னோடித் திட்டமொன்றை இலங்கையின் தெற்கு கடற்கரைப் பகுதியில் செயற்படுத்தல்.
- மருத்துவத் துறையில் நோய் கண்டறிதல், மருத்துவச் சேவைகளை டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் சுகாதாரத் துறையில் வர்த்தகப் பங்குடமைக்காக அரச தனியார் பங்குடமையைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை ஆராய்தல்.
- காலநிலை கொள்திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகளுக்காக பின்லாந்தின் வளிமண்டலவியல் நிறுவனம் மற்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்திற்கிடையிலான ஒருங்கிணைப்புக்கான வாய்ப்பினை ஆராய்தல்.
- இலங்கையின் உயர் இரண்டாம் நிலைக் கல்வித் துறைக்கு உதவுதல்.
- இரு நாடுகளினதும் பாராளுமன்றங்களிடையே தொடர்ச்சியான உரையாடல்களைப் பேணிச் செல்லுதல் மற்றும் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சுற்றுலா பரிமாற்றங்கள்.
- டிஜிட்டல் மயமாக்கல் சம்பந்தமான கூட்டு அறிக்கையை வெளியிடல்




### 3.1.8 2017 – நவம்பர் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம்

கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2017 நவம்பர் மாத இறுதியில் மீண்டும் இந்தியாவுக்கு உத்தியோபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அதன்போது இந்திய ஜனாதிபதி அதிமேதகு ராம் நாத் கோவிந்த் அவர்கள், இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோடி அவர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியினால் வழிநடாத்தப்படும் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளை சந்தித்தார். இந்தக் கலந்துரையாடல்களின்போது அந்நியோன்ய நன்மைகளுக்குப் பங்களிக்க முடியுமான இருதரப்புத் தொடர்புகள் தொடர்பாக இரு நாடுகளினதும் கவனஞ் செலுத்தப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது முதலீட்டுத் திட்டங்களின் முன்னேற்றம், எக்டா ஒப்பந்தத்தின் நிலைமை, இந்து சமுத்திரம் சார்ந்த பிரச்சினைகள், 50,000 வீடமைப்புத் திட்டம், யாப்புச் சீர்திருத்தச் செயற்பாடு தொடர்பான நடவடிக்கைகள், 2017 ஏப்ரல் மாதம் இரு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம், இலங்கையின் அரசியல் நிலைமை மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டது.




## 3.2 இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்தல்

| இலக்கம் | திகதி | சந்தித்த இராஜதந்திரிகள் |
|---|---|---|
| 01 | 2017.01.08 | ஆந்திர பிரதேச முதலமைச்சர் கௌரவ சந்திரபாபு நாயுடு அவர்கள் |
| 02 | 2017.02.07 | சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சுபிர் கோகார்ன் அவர்கள் |
| 03 | 2017.02.20 | இந்திய வெளிநாட்டமைச்சின் செயலாளர் கலாநிதி எஸ் ஜெயசங்கர் அவர்கள் |
| 04 | 2017.02.20 | சீனாவின் உதவி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அதிமேதகு கொங் சுவான்யு அவர்கள் |
| 05 | 2017.02.21 | சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக் குழுவினர் |
| 06 | 2017.02.22 | பீட்டர் ரொஸ்கம் அவர்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மந்திரி சபைப் பிரதிநிதிகள் குழுவினர் |
| 07 | 2017.02.23 | சர்வதேச திணைக்களத்தின் சீன கொமியுனிஸ்ட் கட்சியின் மத்திய குழு அமைச்சர், அதிமேதகு சொங் தாழ அவர்கள் |
| 08 | 2017.02.24 | ஐக்கிய அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் நீதிமன்றக் குழுவின் தலைவர் கௌரவ பொப் குட்லடெ அவர்கள் |
| 09 | 2017.03.03 | இலங்கை – பிரான்ஸ் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் பிரான்ஸ் செனட் சபை உறுப்பினர் மாரி சீ பிலெண்டிக் அவர்கள் |
| 10 | 2017.03.15 | கொரியாவின் வெளிநாட்டமைச்சர், கௌரவ யுன் பியுன் - சே அவர்கள் |
| 11 | 2017.03.28 | ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உப தலைவர் அன்ட்ரூ மெக்டொவல் அவர்கள் |
| 12 | 2017.03.30 | சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் சலீல் செட்டி அவர்கள் |
| 13 | 2017.04.05 | இந்திய வெளிநாட்டமைச்சின் செயலாளர், கலாநிதி எஸ் ஜெயசங்கர் அவர்கள் |
| 14 | 2017.04.07 | சீன பொது அரசியல் ஆலோசனைச் சம்மேளத்தின் தலைவர் அதிமேதகு யூ சென்செங் அவர்கள் |
| 15 | 2017.05.11 | இந்தியப் பிரதமர் அதிமேதகு ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் |
| 16 | 2017.05.23 | பசுபிக் சமுத்திர இராணுவ மற்றும் பசுபிக் சமுத்திர படையணி கட்டளைத் தளபதி ரியர் அட்மிரால் ஆட் மெக்டொனால்ட் அவர்கள் |

| | | |
|---|---|---|
| 17 | 2017.06.19 | சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் அவர்கள் |
| 18 | 2017.07.20 | அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் கௌரவ ஜூலி பிசொப் அவர்கள் |
| 19 | 2017.07.20 | ஐக்கிய அமெரிக்காவின் உப செயலாளர், ஜெனரல் ஜெப் பெல்த்மன் அவர்கள் |
| 20 | 2017.08.09 | துருக்கி குடியரசின் முன்னாள் பிரதமர் அதிமேதகு அஹமத் தாவுதொக்லு அவர்கள் |
| 21 | 2017.08.10 | ஐக்கிய அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஒதுக்கீட்டுக் குழுத் தலைவர் கௌரவ ரொட்னி பிலிஹைசன் அவர்கள் |
| 22 | 2017.08.11 | ஜப்பானியப் பிரதமரின் விசேட ஆலோசகர் கலாநிதி ஹிரோதோ இசுமி அவர்கள் |
| 23 | 2017.08.14 | பெல்ஜியம் நாட்டின் பிரதிப் பிரதமர் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு, டிஜிட்டல்மயமாக்கல், அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் அதிமேதகு அலெக்சாண்டர் த குரூ அவர்கள் |
| 24 | 2017.08.31 | சீசெல்ஸ் நாட்டு உப ஜனாதிபதி அதிமேதகு வின்சன்ட் மெரிடன் அவர்கள் |
| 25 | 2017.08.31 | ஜப்பானின் உப வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அதிமேதகு அய்வாவோ ஹொரி அவர்கள் |
| 26 | 2017.08.31 | இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அதிமேதகு சுஸ்மா சுவராஜ் அவர்கள் |
| 27 | 2017.09.01 | சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் அவர்கள் |
| 28 | 2017.09.01 | தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்க பதில் உதவி இராஜாங்கச் செயலாளர் மற்றும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான பதில் விசே பிரதிநிதித் தூதுவர் எலிஸ் ஜீ வெல்ஸ் அவர்கள் |
| 29 | 2017.09.01 | வியட்நாமின் உதவி வெளிநாட்டமைச்சர் கௌரவ டோ அங் டிசன்க் அவர்கள் |
| 30 | 2017.09.04 | இனர் டெம்பல் தொண்டர் சட்ட அமைப்பின் பொருளாளர் அரச சட்டத்தரணி டேவிட் பிடாவே அவர்கள் |
| 31 | 2017.09.13 | ஜீஎஸ்பீ+ சலுகை செயற்பாட்டு தூதுக் குழு மற்றும் பிரதிநிதித்துவத் தலைவர் கஉஸ் ஹொவிடியுன் அவர்கள் |
| 32 | 2017.10.04 | சார்க் பாராளுமன்ற சபாநாயகர்கள் |
| 33 | 2017.10.16 | அவுஸ்த்திரேலிய சுற்றுலாத்துறை சபையின் பிரதித் தலைவர் திரு.அன்ட்ரூ பர்லி அவர்கள் |

| | | |
|---|---|---|
| 34 | 2017.10.18 | பாகிஸ்தானின் வெளியுறவுச் செயலாளர் டெமீனா ஜங்ஜுவா அம்மையார் |
| 35 | 2017.10.19 | உண்மை, நேர்மை,இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமை சம்பந்தமான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட நிருபர் பெப்லோ டி கிரேப் அவர்கள் |
| 36 | 2017.10.30 | கட்டார் பொருளாதார மற்றும் வர்த்த அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு செய்க் அகமட் பின் ஜசீம் மொகமட் அல் - தானி அவர்கள் |
| 37 | 2017.11.01 | ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்பு பணியகத்தின் உதவி அமைச்சர் மற்றும் பணிப்பாளர் நாயகம் கௌரவ கசுயா நசீடா அவர்கள். |
| 38 | 2017.11.02 | அவுஸ்திரேலியப் பிரதமர் கௌரவமெல்கம் டர்ன்புல் அவர்கள் |
| 39 | 2017.11.06 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் அரசியல் அலுவல்கள் தொடர்பான உப செயலாளர் தோமஸ் செனன் அவர்கள் |
| 40 | 2017.11.09 | பொது நலவாய அமைப்பின் பாராளுமன்ற சங்கத்தின் தலைவர் மற்றும் கனேடிய கிளையின் பிரதிநிதி யஸ்மின் ரதன்சி அம்மையார் |
| 41 | 2017.11.18 | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசாங்கத்தின் வெளியுறவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு சம்பந்தமான அமைச்சர் இளவரசர், செய்க் அப்துல்லா பின் அல் நாஹியன் அவர்கள். |
| 42 | 2017.11.18 | இந்திய வெளியுறவுச் செயலாளர் கலாநிதி எஸ் ஜெய்சங்களர் அவர்கள். |
| 43 | 2017.12.05 | ஓமான் பாராளுமன்றக் குழுவின் மற்றும் தூதுக் குழுவின் தலைவர் (கலாநிதி) யஹ்யா பின் மபு அல் முன்டாரி அவர்கள். |
| 44 | 2017.12.11 | இந்திய விமானப் படையின் ஆளணியின் பிரதானி, எயார் ஷீப் மார்ஷல் பீ எஸ் தானோ அவர்கள். |
| 45 | 2017.12.18 | வங்களா விரிகுடாவை அண்டிய நாடுகளில் பல் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (BIMSTEC) அமைப்பின் பொதுச் செயலாளர் அதிமேதகு சஹிபுல் இஸ்லாம் அவர்கள். |
| 46 | 2017.12.19 | மலேசியப் பிரதமர் கௌரவ டெடோ ஶ்ரீ மொஹமட் நஜீப் பின் டுன் அப்துல் ரஸாக் அவர்கள். |

# 04. தேசிய நல்லிணக்கம், சமூக நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள்

## 4.1 தேசிய நல்லிணக்கம்

### 4.1.1 நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் முன்னேற்றம்

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இன்னுமொரு நடவடிக்கையாக பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் முன்மொழிவுக்கமைய 2015 டிசம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகரிக்கப்பட்டதற்கிணங்க "நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்" தாபிக்கப்பட்டதுடன், அதன் அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமான தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் கருத்தரங்குகளை ஒருங்கிணைத்தல்
- காணாமற்போனோர் பற்றிய அலுவலகம், உண்மைத் தகவல்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, தவறைத் திருத்திக்கொள்ளல் நடவடிக்கை அலுவலகம், விசேட நீதிமன்றங்கள் சபை மற்றும் ஏனைய தொடர்புடைய நல்லிணக்கப் பொறிமுறைகளை தாபிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கால அட்டவணையைத் தயாரித்தல்
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு ஐக்கிய நாடுகள் அமைப்பின் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் உட்பட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவரல்.
- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலக அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றம் பற்றிய பின்னூட்டல் நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைப்பு.
- நீதியின் ஆதிக்கம், மனித உரிமைகள், நிர்வாகம் மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு போன்றவற்றை பலப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

அத்துடன், இந்த ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் தகவல்களை அறிந்துகொள்வதற்கான இணையத்தளமொன்று (www.scrm.gov.lk) யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்ததுடன், காணாமற்போனோர் பற்றிய அலுவலகமொன்றும் தாபிக்கப்பட்டது.

**இந்த அலுலவகத்தின் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான முன்னேற்றம் கீழ்வருமாறு.**

1. **இடைவழி நியாயப் பொறிமுறை**

- இடைவழி நியாயப் பொறிமுறையின் நிமித்தம் தேசிய ஆலோசனை செயலணியின் அலுவல்களை ஒருங்கிணைத்தல்
- முப்படைகள் மற்றும் பொலீஸின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் உரையாடல்களை (Military Dialogue) நடாத்துதல். (பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தலுக்காக வழி நடாத்தல் குழுவொன்றை (Working Group) அமைத்தல்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம், புலம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு என்பவற்றுடன் இணைந்து இடைவழி நியாயப் பொறிமுறை சம்பந்தமாக சர்வதேச நிபுணர்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகளைப் பயன்படுத்தி பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து ஜெனீவா நகரில் நடாத்தப்பட்ட UNHRC மாநாட்டிற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மாநாட்டில் பங்கேற்றமை.

2. **நல்லிணக்கம் மற்றும் மீண்டும் ஏற்படுவதனைத் தவிர்த்தல்.**

- கீழ் மட்டத்தின் சேவை வழங்கலை மேம்படுத்தும் நோக்கில் முன்னணி அமைச்சுக்கள் மற்றும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகத்துடன் இணைந்து இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கிணங்க, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட காணாமற்போனோரின் சான்றிதழ் சம்பந்தமாக அவதானித்தல் மற்றும் அந்த சேவைகளை மேம்படுத்துவதற்கு உதவி புரிந்தமை
- சர்வதேச சமாதானத்தை கட்டியெழுப்பும் குழுக் கூட்டங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களால் நல்லிணக்கத்துடன் தொடர்பான நிதி வழங்கும் செயற் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து இணைத் தலைமையை வகித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றல்.

3. **தொடர்பாடல் மற்றும் சமூகமயப்படுத்தல்**

- அரசாங்கத்தின் நல்லிணக்க வேலைத் திட்டம் சம்பந்தமாக முன்னணி அமைச்சுக்கள் மற்றும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகத்துடன் இணைந்து ஆலோசனை செயலணி மற்றும் பிரதேச செயலணி அங்கத்தவர்களை அறிவுறுத்தும் நோக்கில் காலாண்டு ரீதியிலான மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.

- நல்லிணக்கப் பொறிமுறையுடன் தொடர்பாக முன்னணி அமைச்சுக்கள் மற்றும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் அலுவல்களின் முன்னேற்றம் சம்பந்தமாக இராஜதந்திரிகளுடன் நிதமும் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

**4. ஆராய்ச்சி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள்**

- சர்வதேச ரீதியாக நடைபெற்ற செயலமர்வுகளுக்கு நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமான ஒருங்கிணைப்பு செயலகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு உலகம் பூராவும் பரந்து காணப்படும் இடைவழி நியாயத்துடன் தொடர்புடைய ஏற்பாடுகள் சம்பந்தமாக ஆய்வு செய்தல்.
- சட்ட ரீதியாக எழுந்துள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

### 4.1.2 அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்கள் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மற்றும் யாப்பு உருவாக்கம் தொடர்பான பொது மக்கள் உதவித் திட்டத்தின் நோக்கம் 2015 ஆம் ஆண்டில் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்பு, நாட்டில் செயற்படுத்தப்படும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் யாப்பு உருவாக்கம் தொடர்பாக பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச அதிகாரிகள், சமயத் தலைவர்கள், மாணவர் சமூகம், இளைஞர் சமூகம் ஆகியோரை அறிவூட்டுவதற்கு அவர்களை அணுகுவதாகும்.

இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மற்றும் யாப்பு உருவாக்கம் தொடர்பான மக்கள் உதவி வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரினால் அரசியலமைப்பு சபைச் செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் அலுவகத்தை உசாவி, கீழ் குறிப்பிடப்படும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

1. தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து இளைஞர் ஒன்றியம்

   2016 டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இளைஞர் பாராளுமன்றத்தின் ஊடாக 25 மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டன.

2. கல்வியமைச்சுடன் இணைந்து பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்

   2016 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2017 பெப்ரவரி மாதம் வரை அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

3. உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மாவட்டச் செயலகங்கள் ஊடாக அரச அதிகாரிகள் ஒன்றியம்

பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

4. நாட்டின் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து மக்கள் ஒன்றியம் ( சிவில் சமூகம்)
5. சர்வோதய இயக்கத்துடன் இணைந்து மேலதிக சிவில் சமூக நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாவது கட்டம் சகல மதத் தலைவர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒரு மாவட்டத்திலிருந்து ஒரு மத ஸ்தலங்கள் மற்றும் அவற்றின் 15 தலைமை மத குருமார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதன் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் 2017 நவம்பர் 14 ஆம் திகதி மூன்று நிக்காயக்களையும் சேர்ந்த 40 தலைமை தேரர்களின் பங்கேற்புடன் விசும்பாயவில் நடாத்தப்பட்டது.

## 4.2 ஊழியர் நலனோம்புகை

பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 4.2.1 ஆயுர்வேத வைத்திய சிகிச்சை முகாம்

பிரதம அமைச்சர் அலுவலக நலன்புரிச் சங்கத்துடன் இணைந்து சித்தாலேப ஆயர்வேத வைத்தியசாலை, 2017.07.20 ஆந் திகதி பிரதம அமைச்சர் அலுவலக பணியாட் குழுவினருக்கு வைத்திய முகாமொன்று நடாத்தப்பட்டது. ஆரோக்கியமான வாழ்விற்கு உதவும் நோக்குடன் இடம்பெற்ற அந்த வைத்திய முகாம் ஊடாக பணியாட் குழுவைச் சேர்ந்த 200 க்கும் அதிகமானோர் வைத்திய சிகிச்சையைப் பெற்றுக் கொண்டனர்.





## 4.3 சமய நிகழ்வுகள்

புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்பு பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களுக்கிடையே சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்து சமயங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஓர் பிரதான சமய நிகழ்வொன்றை பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய ரீதியாக கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 4.3.1 கொழும்பு நவம் மகா பெரஹரா

ஹுனுப்பிட்டி, கங்காராம விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகம் என்பவற்றினால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கொழும்பு நவம் மகா பெரஹரா 2017 பெப்ரவரி மாதம் 09 மற்றும் 10 ஆந் திகதிகளில் மிகவும் விமர்சையாக, கொழும்பு நகர் முழுவதும் ஒளி பரப்பிய வண்ணம் வீதி வலம் வந்தது.

75 யானைகள் இந்த நவம் பெரஹராவினை அலங்கரித்ததுடன், மேலநாட்டு, கீழ்நாட்டு மற்றும் சப்ரகமுவ கலை சம்பிரதாயங்களுக்குரிய நாட்டிய நிகழ்வுகள் மற்றும் ஏனைய அலங்காரம் மிக்க பல நாட்டியங்களில் கிட்டத்தட்ட 7000 கலைஞர்கள் பங்குபற்றினர்.

இம்முறை கொழும்பு நவம் பெரஹராவின் ஆரம்ப தினமான 2017 பெப்ரவரி மாதம் 09 ஆந் திகதி தாதுப் பேழையை மங்கள எனும் கொம்பன் யானை மீது வைத்து பெரஹரா நிகழ்வுகளை ஆரம்பிக்கும் வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பங்குபற்றியதுடன், பெரஹராவின் இரண்டாம் தினமான பெப்ரவரி 10 ஆந் திகதி தாதுப் பேழையை மங்கள எனும் கொம்பன் யானை மீது வைத்து பெரஹரா நிகழ்வுகளை ஆரம்பிக்கும்

வைபவம் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பெரஹராவைப் பார்வையிட இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்திருந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிக எண்ணிக்கையானோருக்குப் பெரஹராவைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறே இந்தப் பெரஹரா உள்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை உலகிற்கு எடுத்துக் கூறவும், அந்தக் கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாய் அமைந்தது.





### 4.3.2 அலரி மாளிகையில் இடம்பெற்ற ஆயிரம் பிக்குமாருக்கு புண்ணிய தானம் வழங்கும் வைபவம் - 2017

பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புண்ணிய தானம் வழங்கும் வைபவம் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் பங்குபற்றலுடன் 2017 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதி அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த புண்ணிய தானம் வழங்கல் நிகழ்வில் மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகா நாயக்க தேர்கள், அனு நாயக்க தேரர்கள், சங்க நாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.





### 4.3.3 புனித தாதுப் பொருட்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் காட்சிப்படுத்தல்

கங்காராமை விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்தி புத்த ரஷ்மி தேசிய வெசாக் விழாவுடன் இணைந்தவாறு நீலகிரி தாதுப் பொருட்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு 2017 மே மாதம் 11 ஆந் திகதி முதல் 14 ஆந் திகதி வரை அலரி மாளிகை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் காட்சிப்படுத்தல் 2017 மே மாதம் 11 ஆந் திகதி பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சிக்குத் தொல்பொருளியல் திணைக்களம், கல்வியமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, நாரத பௌத்த மத்திய நிலையம், மத்திய கலாச்சார நிதியம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம், தேசிய சுவடிக் கூடத் திணைக்களம், பௌத்த அலுவல்கள் திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை, கைவிணைப் பொருட்கள் சபை (லக்சல), தேசிய அலங்கார மத்திய நிலையம், ஆயர்வேதத் திணைக்களம், நுண்கலை கற்கைகள் பல்கலைக்கழகம், மேல், மத்திய, ஊவா, தென், வடமேல், சப்ரகமுவ மாகாண சபைகளின் கலாச்சார அமைச்சுக்கள் என்பவற்றினால் காட்சிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கண்காட்சிளைப் பார்வையிடுவதற்கு அதிகளவானோர் வருகை தந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிகமானோருக்குப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாறே தாதுப் பொருட்கள் உட்பட இவ்வாறான பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்களின் தொகுதியை ஒரே இடத்தில் காண்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

### 4.3.4 புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம்

கங்காராமை விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுலவகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புத்த ரஷ்மி வெசாக் வைபவம் 2017 மே 11 ஆந் திகதி முதல் 14 ஆந் திகதி வரை கங்காராமை விகாரை, அலரி மாளிகை, பேரே வாவி என்பவற்றைச் அண்டிய பகுதிகளில் வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது.

புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில், பல அமைச்சர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றதுடன், அந்த நிகழ்வில் இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோடி உள்ளிட்ட வெளிநாட்டு அரச தலைவர்கள் மற்றும் தூதுக் குழுவினரும் கலந்துகொண்டனர்.

அவ்வாறே இந்த வெசாக் வலயம் பேரே வாவியின் தண்ணீர் மேற்பரப்பு மீது நிர்மாணிக்கப்பட்ட விசேட வெசாக் நிர்மாணங்கள், பௌத்த பக்தி கீத அரங்கேற்றம், பௌத்த நாடக அரங்கேற்றம்,

பௌத்த ஜாதகக் கதைகள் ஊடாக முன்வைக்கப்பட் வீதி நாட்டியங்கள், பொம்மலாட்டம், வெசாக் தொரண போன்ற பல அம்சங்கள் நிறைந்த பாரிய சமய, கலாச்சார நிகழ்வாக அமைந்தது.

புத்த ரஷ்மி வெசாக் வலயத்தைக் காண்பதற்காக இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிக எண்ணிக்கையானோருக்கு இந்த வெசாக் வலயத்தைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது தேசிய படைப்பாளிகளின் திறமைகளை உலகுக்கு எடுத்துக் கூறவும், தேசிய கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாய் அமைந்தது.





### 4.3.5 இப்தார் வைபவம்

இஸ்லாமிய பக்தர்கள் மிகுந்த பக்தியுடன் கொண்டாடும் இப்தார் நிகழ்வு இஸ்லாமிய பக்தர்கள், மௌலவிமார் 1500 க்கு மேற்பட்டோரின் பங்குபற்றலுடன் 2017 ஜுலை மாதம் 22 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.





### 4.3.6 கொள்ளுபிட்டி வாலுகாராம மகா விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா

மத சகவாழ்வின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு கொள்ளுபிட்டி வாலுக்காராம மகா விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா 54 ஆவது தடவையாகவும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் 2017 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்றது.

கௌரவ பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கோலாகலமான முறையில் நடாத்தப்பட்ட இந்த பெரஹரா வைபவம் பாரம்பரிய தேசிய நடன சம்பிரதாயத்தை எடுத்தியம்பும் மேல் நாட்டு, கீழ் நாட்டு நடனங்களாலும், அலங்கரிக்கப்பட்ட ஏராளமான யானைகளாலும் மேலும் மெருகூட்டப்பட்டதாக இருந்தது.

அத்துடன், இந்த பெரஹரா வைபவத்தைக் கண்டு களிப்பதற்காக ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கலந்து கொண்டதுடன் தொலைக்காட்சி அலைவரிசை ஊடாகவும் அநேகமானோருக்கு பெரஹராவைக் கண்டு களிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது.





### 4.3.7 தீபாவளிப் பண்டிகை

பிரதமர் அலுவலகம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சினால் இணைந்து மூன்றாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட தீபாவளி தேசியப் பண்டிகை 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி கௌரவ பிரதமரின் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள் உட்பட்ட சுமார் 1500 இந்து பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்து மதக் கிரியைகளுக்கு மற்றும் இந்து கலாசார அம்சங்களுக்கு முதலிடம் வழங்கி கொண்டாடப்பட்ட இந்த தீபாவளிப் பண்டிகையின் நோக்கம் அசத்தியத்தை ஒழித்து சத்தியத்தை மேலோங்கச் செய்தல், குரோதத்தை ஒழித்து அன்பை மேலோங்கச் செய்தல், வெறுப்பை ஒழித்து கருணையை மேலோங்கச் செய்தல், குரோதத்தை ஒழித்து அன்பை மேலோங்கச் செய்தல், சார்ந்திருப்பதனை ஒழித்து சுயாதீனத்தை மேலோங்கச் செய்தல் மற்றும் தீமையை ஒழித்து நன்மையை மேலோங்கச் செய்தல் என்பவனவாகும்.

# 05. பொது மக்களின் முறைப்பாடுகள்/குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

## 5.1 பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி தற்போது நிலவும் பொதுசன தொடர்புகள் பிரிவின் அலுவல்களை விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலிருந்தும் வருகைதந்து அல்லது எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் பிரச்சினைகள், முறைப்பாடுகள், தேவைகளை தீர்ப்பதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பொதுசன தொடர்புகள் பிரிவு இல. 101, ஆர்.ஏ த மெல் மாவத்தையில் புதிய இடத்தில் 2017.07.20 ஆம் திகதி தாபிக்கப்பட்டது..






இந்தப் பிரிவு பிரதம அமைச்சரின் செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுவதுடன் ஆலோசகர் (பொதுசன தொடர்புகள்) இருவர் மற்றும் பணிப்பாளர் ஒருவரின் மற்றும் சுமார் 25 பேர்களைக் கொண்ட ஆளணி அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

நாட்டின் அனைத்து நிறுவனங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் பொது மக்கள் முறைப்பாடுகள் மற்றும் சேவைகளுக்கான கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் அலுவலாகும். அத்துடன் குறிப்பிட்ட பொது மக்களின் கோரிக்கைகள், தேவைகளை உரிய நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளல் சம்பந்தமான முன்னேற்றத்தை நிதமும் வினவி, குறிப்பிட்ட பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றல் சம்பந்தமான பின்னூட்டல் நடவடிக்கையம் மேற்கொள்ளப்படுகின்றது. இது தவிர அரச நிறுவனங்களில் பொதுசன தொடர்புகள் அலுவல்கள் சம்பந்தமான ஆற்றல்களை மேம்படுத்தல், வசதிகளை மேம்படுத்தல், பொதுசனத் தொடர்புகள் மூலோபாயங்களை பலப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக இப் பிரிவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

<u>**குறிக்கோள்கள்:**</u>

- சேவை வழங்கலை வினைத்திறன் மற்றும் முறைப்படுத்தல் சம்பந்தமான கவனத்தை அதிகரித்தல்.
- பொதுமக்கள் தேவைகள், பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- அரச துறையில் பொதுசன தொடர்புகள் பிரச்சினைகள் தீர்வுகள் சம்பந்தமாக முகாமைத்துவத்தை மேம்படுத்தல்.
- பொது மக்கள் தொடர்புகள், பிரச்சினைகளை தீர்த்தல் பிரவேசத்தின் மதிப்பீட்டு செயற்பாட்டை முறையாக வழிநடாத்தல்.
- அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், அரசியல் சார்ந்த நிறுவனங்கள், பொது மக்கள் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்துகொள்வதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல், அந்த ஆற்றல் மற்றும் திறமையை மேம்படுத்தல்.
- பொது மக்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை அறிமுகஞ் செய்தல்.
- பொது மக்கள் தொடர்புகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தகவல் தொழில்நுட்ப தொடர்புகளை இனங் காணல் மற்றும் பலப்படுத்தல்.
- பங்கேற்பு அபிவிருத்தி பிரவேசங்கள், உரையாடல்கள் மற்றம் தொடர்பாடல்கள் ஊடாக பிரஜைகளின் பலத்தை மேம்படுத்தல், பிரஜைகளின் பங்கேற்பை உறுதி செய்யும் பிரவேசங்களை அறிமுகஞ் செய்தல்.

- பொது மக்கள் சேவைகளின் முன்னேற்றம் மற்றும் இலகுபடுத்துவதற்காக தொழில் சார்ந்த துறைகளைப் பலப்படுத்தல் மற்றம் மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல்.

**<u>மூலோபாயங்கள்</u>**

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் பொதுசன தொடர்புகள் பிரிவொன்றை அமைத்தல் மற்றும் அதனூடாக பொது மக்களுக்கு தமது பிரச்சினைகளை இலகுவாக முறையில் முன்வைப்பதற்காக வசதியான இடமொன்றை தயார் செய்தல்.
- அரச நிறுவனங்களுடன் பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம் பேணி வரும் தொடர்புகளை பலப்படுத்துவதற்காக அனைத்து முக்கிய அரச நிறுவனங்களும் தொடர்புபடும் வகையில் பொதுசன தொடர்பு பிரிவுகள் குழுக்களை ( Public Relation Cell) அமைத்தல்.
- அதனூடாக பொது மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரச துறையின் பொறுப்புக்கூறல் (Responsiveness) மற்றும் பொறுப்பை (Responsibility) உறுதி செய்தல், பின்னூட்டல் முறைகளை அறிமுகஞ் செய்தல் ஊடாக பொது மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்தல் சம்பந்தமாக மீளாய்வுக்குட்படுத்த முடியமான பொறிமுறையொன்றை அறிமுகஞ் செய்தல்.
- பொது மக்கள் பிரச்சினை சம்பந்தமான விடயங்களை (subject) இனங்காணல் ஊடாக பிரச்சினைகள் பகுப்பாய்வு பிரவேசத்தின் ஊடாக பொதுவாக அவ்வாறான பிரச்சினைகளை குறைப்பதற்காக கொள்கை சாரந்த தொடர்புகளை ஏற்படுத்தல்.
- பொது மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தகவல் தொழில்நுட்ப கருவியொன்றை அறிமுகஞ் செய்தல் மற்றும் எதிர்காலத்தில் அந்த தகவல் தொழில்நுட்ப முறையை நிறுவன ரீதியாக வலையமைப்புக்குட்படுத்துவதன் உடாக மிக விரைவில் பிரச்சினைகளை தீர்க்கும் பிரவேசங்களை விருத்தி செய்தல்.
- பொது மக்கள் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் கொள்கை ரீதியிலான உரையாடல்களை எற்படுத்தல் ஊடாக பல்வேறு மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல்.



**கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் / தேவைகள் மற்றும் அவை தொடர்பான முன்னேற்றம்**

| **மாதம்** | **கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை** | **பதில் அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| ஜனவரி | 3801 | 2708 |
| பெப்ரவரி | 4031 | 2898 |
| மார்ச் | 4649 | 3223 |
| ஏப்ரல் | 2669 | 1766 |
| மே | 2499 | 1871 |
| ஜூன் | 2150 | 1678 |
| ஜூலை | 2268 | 1819 |
| ஆகஸ்ட் | 3977 | 3330 |
| செப்டெம்பர் | 4045 | 3664 |
| ஒக்டோபர் | 6175 | 4270 |
| நவம்பர் | 6347 | 4602 |
| டிசம்பர் | 4530 | 3326 |
| **மொத்தம்** | **47141** | **35155** |

**பொழிப்பு:**

| | | |
|---|---|---|
| பதில் அளிக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | - | 35155 |
| கிடைத்த பதில் கடிதங்களின் எண்ணிக்கை | - | 6830 |
| பிரதிகளாக கோவைப்படுத்திய கடிதங்களின் எண்ணிக்கை | - | 5077 |
| 2017.12.31 ஆம் திகதியன்று பதில் அனுப்ப வேண்டிய கடிதங்கள் | - | 79 |
| **2017 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்தக் கடிதங்கள்** | - | **47141** |

2017 ஜூலை மாதம் பொதுசன தொடர்புகள் பிரிவை தாபித்ததன் பின்னர் பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு பதில் அனுப்புவதற்கு எடுத்த காலத்திற்கமைய (நாட்கள்) முன்னேற்றம் கீழே குறிப்பிடப்படுவதுடன் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு நாளினுள் பதில் அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| **கட்டம்** | **பதில் அனுப்புவதற்கு எடுத்த நாட்கள்** |
|---|---|
| முதலாம் கட்டம் | 10 நாட்கள் |
| 2 ஆம் கட்டம் | 9.05நாட்கள் |
| 3 ஆம் கட்டம் | 4.38நாட்கள் |
| 4ஆம் கட்டம் | 3.38நாட்கள் |
| எதிர்பார்க்கும் முன்னேற்றம் | ஒரு நாள் சேவை |



**எதிர்காலத் திட்டங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்**

- **இணையத்தள வசதிகளை பலப்படுத்தல்**

இணையத்தள வசதிகள் ஊடாக பொது மக்கள் பிரச்சினையைத் தீர்க்கும் கட்டமைப்பொன்றை தாபித்தல். அதனூடாக இலத்திரணியல் தொழில்நுட்ப வசதிகளின் ஊடாக உரிய நிறுவனங்களுடன் நிலவும் தொடர்புகளை பலப்படுத்தல் மற்றும் பிரச்சினைகளை இலத்திரணியல் தொழில்நுட்பத்தின் ஊடாக ஒருங்கிணைத்தல்.

- **பொதுசன தொடர்பு வலையமைப்பை தாபித்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் வலையமைப்பை இனங்காணல், சகல நிறுவனங்களிலும் பொதுசன தொடர்புகள் பிரிவை தாபித்தல் ஊடாக அரச பிரிவின் பொதுசன தொடர்புகளை மேலும் பலப்படுத்தல்.

- **பிரஜைகள் மற்றும் பொது மக்கள் பட்டயத்தை அறிமுகஞ் செய்தல்**

பொது மக்கள் சேவைகளை மிகவும் முறையாக மற்றும் வினைத்திறனுடன் மற்றும் பொறுப்புக்கூறலுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் சம்பந்தமாக கொள்கைகள் உட்பட பொது மக்கள் பட்டயத்தை அறிமுகஞ் செய்தல் மற்றும் அதனூடாக பொது மக்கள் சேவைகளை வழங்கல் சம்பந்தமாக தரப்படுத்தலை ஏற்படுத்தல்.

- **தொழிற் சங்கத் தொடர்புகளை பலப்படுத்தல்**

நிறுவன ரீதியிலான சேவைகளை வழங்குவதற்காக தொழிற் சங்கங்களுடனான தொடர்புகள் ஊடாக நிறுவனம் சார்ந்த மற்றும் தொழில் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மூலோபாயங்களை இனங்காணல். பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு தடையாக இருக்கும் தொழிற் சங்க நடவடிக்கைகளை குறைப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் இயலளவை அபிவிருத்தி செய்தல்.

- **பொதுசன தொடர்புகள் கொள்கை ஆய்வு மற்றும் முகாமைத்துவம்**

அரச துறையின் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பொது மக்கள் சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்குத் தேவையான கொள்கைகள் ஆய்வில் ஈடுபடல் மற்றும் அதனூடாக பொது மக்கள் சேவைகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை இனங்காணல் மற்றும் உரிய பிரிவுகளை அதில் ஈடுபடுத்தல்.

## 5.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்.



# 06. பாராளுமன்றம் மற்றும் சட்டரீதியான அலுவல்கள்

## 6.1. பாராளுமன்ற அலுவல்கள்

பாராாளுமன்றம், அமைச்சரவை அலுவலகம் மற்றும் ஏற்புடைய சட்ட அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்யும் ஓர் பிரிவாக பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள பாராளுமன்றம் மற்றும் சட்ட அலுவல்கள் பிரிவினால் இந்த அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 6.1.1 அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல்

- **அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள்**

2017 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை பல்வேறுபட்ட விடயங்களுக்காக 91 அமைச்சரவை நிருபங்களும் 33 அமைச்சரவைக் குறிப்புக்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபங்கள் மற்றும் குறிப்புக்கள் தொடர்பாக அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில், பிரதம அமைச்சரின் செயலாளரினால் செயற்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்தல் மற்றும் அவை தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல்**

பிரதம அமைச்சர் அவர்களினால் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஏற்புடையனவாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் 2017 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கேட்கப்பட்ட வாய்மூலமான வினாக்களில் 72 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. கௌரவ ஜனாதிபதி அவர்களின் விடயப்பரப்பின் கீழ் வரும் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு போன்றே பாதுகாப்பமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட வாய்மூலமான வினாக்கள் 43 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விடயப்பரப்பிற்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக வாய்மூலமான வினாக்கள் 29 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட வினாக்கள் 13 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. அதே போன்று கௌரவ பிரதம அமைச்சர் அவர்களிடம் வினாத் தொடுக்கும் சந்தர்ப்பத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் மிக்க கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக அனைத்து மாதங்களிலும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் வாய்மூலமான வினாக்கள் 04 க்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய

இக்காலப்பகுதியினுள் வாய்மூலமான வினாக்கள் 28 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், சபை ஒத்திவைப்புப் பிரேரணைகள் 03 க்குப் பதில்கள் வரையப்பட்டுள்ளன.

### 6.1.2 பாராளுமன்ற அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல்

ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக வருடாந்த அறிக்கைகள், செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், 2017 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் கீழுள்ள விடயங்களின் கீழ் 15 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

#### i. வருடாந்த அறிக்கைகள்

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2008 - 2015
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2016
- தேசிய நிதி ஆணைக்குழு - 2015
- நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பு நியாய சபை -2015
- நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பு நியாய சபை -2016
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - 2013 - 2014
- அரசாங்க சேவை ஆணைக்குழு – 2016

#### ii . முன்னேற்ற அறிக்கைகள்

- எல்லை நிர்ணய ஆணைக்குழு – 2016

#### iii. காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்

- அரச சேவை ஆணைக்குழு - 2017.04.01 - 2017.06.30
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2017.01.01 - 2017.03.31

#### iii. செயற் திறன் அறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள்

- அரச சேவை ஆணைக்குழு - 2016

- தேர்தல் ஆணைக்குழு - 2016
- நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பு நியாய சபை – 2016

**iv. ஏனையவை**

- 2017 ஆம் நிதியாண்டிற்கான தேசிய நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்
- 2018 ஆம் நிதியாண்டிற்கான தேசிய நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்

### 6.1.3 பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பில் மற்றும்ஜனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் பிரேரணை அங்கீகாரங்களாகச் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு ஏற்புடைய அனைத்து அலுலவல்களும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், 2017 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரை கீழுள்ள பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேர்தலொன்றின்போது அல்லது சர்வஜன வாக்கெடுப்பின்போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டடல்கள்
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகளைத் திருத்தியமைத்தல்
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கின் எல்லைகளைத் திருத்தியமைத்தல்
- சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் படிகளைத் திருத்தியமைத்தல்
- இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) யாப்பின் கீழ் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத் திருத்தம்
- இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 108(1) யாப்பின் கீழ் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஓய்வூதியத்துடனான விசேட நிலையான கொடுப்பனவொன்றை வழங்குதல்

- தேசிய கல்வி ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரின் ஊதியம் மற்றும் ஆணைக் குழு அங்கத்தவர்களின் படிகளைத் திருத்தியமைத்தல்.
- பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் மற்றும் படிகளைத் திருத்தியமைத்தல்
- ஹைட்ரோபுளோரொகாபனை (Hydroflurocabons - HFC) கட்டங் கட்டமாக வரையறுத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியல் அமைப்புடன் மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தத்திற்கு இலங்கை இணங்கிச் செயற்படல்.

## 6.2 சட்டரீதியான அலுவல்கள்

சட்டங்களை வரைதலுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைப் போன்றே பிரதம அமைச்சரை ஒரு தரப்பினராக்கப்பட்டிருக்கும் வழக்கு நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

### 6.2.1 சட்ட வரைவுகளை மேற்கொள்வதுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவல்கள்

இலங்கையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல்வேறுபட்ட விடயங்களை சட்ட ரீதியாக வலுப்பெறச் செய்தல் மற்றும் அடிப்படையொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களின்போது அடிப்படை சட்ட வரைவுகளை பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக தயாரித்தல் முதல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக நிறைவேற்றும் வரையான அடிப்படை ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைவாக, 2017 ஜனவரி மாதம் முதல் 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கீழ்வரும் சட்டங்களை உருவாக்குவதுடன் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்தை தாபித்தல், அதன் நிர்வாக ரீதியான மற்றும் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான திருத்தச் சட்ட வரைவினை, 2017 ஜூலை 03 ஆம் திகதி மாதம் சட்டமாக நிறைவேற்றுவது தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
- அந்நியச் செலாவணிச் சட்டம் - அந்நியச் செலாவணியை ஊக்குவித்தல் மற்றும் முறைப்படுத்துவதற்காக 2017 ஜூலை மாதம் 28 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்.

அத்துடன், இப்பிரிவினால் கீழுள்ளவாறு காணி முகாமைத்துவம், பலவந்தமாக காணாமல் செய்யப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான இணக்கப்பாட்டிற்கு

ஏற்புடைய புதிய சட்டங்களை வரைவு செய்தல், அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாகவும், கம்பனிச் சட்டத் திருத்தம், அதிகாரங்களை ஒப்படைக்கும் ஏற்பாடுகள், உத்தேச இலங்கை தீவிரவாத எதிர்ப்பு சட்ட ரீதியான வரையறையைக் கட்டியெழுப்புதல், மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம், பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத் திணைகளத்துடன் தொடர்புடைய சட்ட மூலங்களை வரைதல் போன்ற சட்டங்கள் தொடர்பான அலுவல்களை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப ஒருங்கிணைப்புப் பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- காணி (விசேட ஏற்பாடுகள்) சட்ட வரைவு
- அரச காணி வங்கிச் சட்ட வரைவு
- காணாமல் செய்யப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச இணக்கப்பாட்டிற்கான சட்ட வரைவு
- தேசிய கணக்காய்வுச் சட்ட வரைவு
- 2002 இலக்கம் 02 எரிசக்தி வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தியமைத்தல்
- 2007 இலக்கம் 07 கம்பனிச் சட்டத்தைத் திருத்தியமைத்தல்
- அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களுக்கு அலுவல்களை ஒப்படைக்கும் (துணை ஏற்பாடுகள்) சட்ட வரைவு
- தன்னார்வ வெளிப்படுத்தல் சட்ட வரைவு
- அதிகார ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்கள்) (விசேட ஏற்பாடுகள்) சட்ட வரைவு
- மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்ட வரைவு
- இலங்கை தீவிரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு
- பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தை தாபித்தல்
- 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்

### 6.2.2 வழக்கு நடவடிக்கைகள்

பிரதம அமைச்சர் அவர்களை பிரதிவாதியாக்கி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 37 வழக்குகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 11 வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 07. மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

## 7.1 மனித வளங்கள் அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்து அதனூடாக அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க, பயன்மிக்க மற்றும் தரமான வகையில் மேற்கொள்வதற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். அதற்கமைய, 2017.01.01 முதல் 2017.12.31 வரையிலான காலப் பகுதிக்குள் வழங்கப்பட்டுள்ள தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாட நெறிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**உள்நாட்ப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள்**

| | **பாடநெறியின் பெயர்** | **பயிற்சி நிறுவனம்** | **பயிற்சிக் கால எல்லை** | **கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1. | சேவை பெறுநர் கவனிப்பு | மனித வளங்கள் அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை | 2017.01.10 | 01 |
| 2. | CIGAS பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2017.01.24-2017.01.26 | 02 |
| 3. | முதல் தர அரச பெறுகை ஊடாக பெறுகை ஊழல்களை ஒழித்தல் | மிலோதா நிறுவனம் | 2017.01.25 | 03 |
| 4. | ஒப்பந்தப் பணிகள் மற்றும் பெறுகை முகாமைத்துவம் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 08 மாதங்கள் | 01 |
| 5. | Payroll பாடநெறி | மிலோதா நிறுவனம் | 03 நாட்கள் | 01 |
| 6. | பெறுவனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | மிலோதா நிறுவனம் | 01 வருடம் | 01 |
| 7. | கண்காணிப்பு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2017.02.20-2017.02.21 | 03 |
| 8. | அரச உபாயங்கள் மற்றும் உலகத் தொடர்புகள் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவனம் | 01 வருடம் | 05 |
| 9. | சிவிப் பொறியியல் திட்டமிடல் பாடநெறி | இலங்கை பொறியியல் நிறுவனம் | 03 மாதங்கள் | 01 |
| 10. | ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பான பயற்சிப் பாடநெறி | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2017.03.16-2017.03.17 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | அபிவிருத்திக் கல்வி தொடர்பான பட்டப்பின் கற்கைப் பாடநெறி | கொழும்பு பல்கலைக்கழகம் | 01 வருடம் | 01 |
| 12. | கோப்பு முகாமைத்துவம், பொது அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக்கோவை தொடர்பான பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2017.03.27-2017.03.29 | 02 |
| 13. | சாரதிகளுக்கான பயிற்சிப் பாடநெறி | நிர்மாண இயந்திர உபகரணங்கள் பயற்சி நிலையம் | 2017.03.04 2017.03.11 | 25 |
| 14. | கனிஷ்ட நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆங்கில டிப்ளோமா பாடநெறி | மிலோதா நிறுவனம் | 01 வருடம் | 05 |
| 15. | தகவல் தொழிநுட்பம் சாரா அலுவலர்களுக்கான தகவல் தொழிநுட்பத் திறன் பயிற்சி | மிலோதா நிறுவனம் | 2017.05.08-2017.05.09 | 01 |
| 16. | சம்பள மாற்றியமைப்பு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2017.06.15 - 2017.06.16 | 01 |
| 17. | அரச உபாயங்கள் மற்றும் உலகத் தொடர்புகள் தொடர்பான பட்டப்பின் கற்கைப் பாடநெறி | பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவனம் | 04 மாதங்கள் | 01 |
| 18. | அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் மனப்பாங்கு மற்றும் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்கான பயற்சிப் பாடநெறி | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2017.06.22 - 2017.06.23 | 03 |
| 19. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பான செயலமர்வு | மனித வளங்கள் அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை | 2017.07.06 | 02 |
| 20. | போக்குவரத்து அலுவலர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2017.08.25-2017.08.26 | 01 |
| 21. | மேலதிக செயலாளர்களுக்கான பேச்சு ஆங்கிலம் செயலமர்வு | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 2.5 மாதங்கள் | 01 |
| 22. | சிங்களம் - ஆங்கிலம் மொழிபெயர்ப்புப் பாடநெறி | களனி பல்கலைக்கழகம் | 01 வருடம் | 01 |
| 23. | கனிஷ்ட நிர்வாகிகளுக்கான ஆங்கில டிப்ளோமா பாடநெறி | மிலோதா நிறுவனம் | 01 வருடம் | 03 |
| 24. | பொது நிர்வாகம் மற்றும்முகாமைத்துவம் சம்பந்தமான முதுமாணிப் பட்டப் பாடநெறி | கொழும்புப் பல்கலைக்கழகம் | 01 வருடம் | 02 |
| 25. | முறையான கடிதங்கள் எழுதும் ஆற்றல் | மிலோதா நிறுவனம் | 02 நாட்கள் | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | தனிநபர் முன்னேற்றம், அலுவலகம் மற்றும் சமூக முறைமை பற்றிய ஒரு நாள் பயிற்சி செயலமர்வு | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 01 நாள் | 18 |
| 27. | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பொருட்கள் கொள்வனவு நடைமுறை | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 02 நாட்கள் | 02 |

**வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்**

| | **பாடநெறி** | **நாடு** | **பயிற்சிக் கால எல்லை** | **கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | சமயத்தை அடிப்படையாகக் கொண்ட பல்லின சமூகத்தில் ஒருமைப்பாடு, மோதல்கள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் | சிங்கப்பூர் | 2017.01.16-2017.01.20 | 02 |
| 2 | விஞ்ஞானத்திற்கான சகுரா பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் | ஜப்பான் | 2017.02.19-2017.02.25 | 01 |
| 3 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு | சீனா | 2017.03.10 - 2017.03.30 | 01 |
| 4 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான சர்வதேச ஒத்துழைப்புக்கான கொள்திறன் விருத்தி | சீனா | 2017.03.10 - 2017.03.30 | 01 |
| 5 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இராஜதந்திரிகளுக்கான மாநாடு | சீனா | 2017.03.16-2017.04.05 | 01 |
| 6 | நிதிப் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல் | இந்தியா | 2017.03.20-2017.03.31 | 01 |
| 7 | உயர் பெறுபேறுமிக்க தலைமைத்துவ/முகாமைத்துவ அபிவிருத்தி | இந்தியா | 2017.03.20-2017.04.14 | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூகக் கொள்கைகள் | சீனா | 2017.03.21-2017.04.10 | 01 |
| 9 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான இளம் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | சீனா | 2017.04.06-2017.04.26 | 01 |
| 10 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நிர்வாக அதிகாரிகளுக்கான முகாமைத்துவம் | சீனா | 2017.04.12-2017.04.26 | 01 |
| 11 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான கிராமியப் பொருளாதார அபிவிருத்தியில் சீன அனுபவங்கள் | சீனா | 2017.04.12-2017.05.04 | 01 |
| 12 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான நகர நிர்மாணங்கள் மற்றும் திட்டமிடல்களை ஊக்குவித்தல் | சீனா | 2017.04.12-2017.05.04 | 01 |
| 13 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான அபாயகரமான கைத்தொழிற் கொள்கைகள் அபிவிருத்தி | சீனா | 2017.04.14-2017.04.28 | 01 |
| 14 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தெற்கு ஒத்துழைப்பு | சீனா | 2017.06.01-2017.06.21 | 01 |
| 15 | 38 ஆவது வருடாந்த சர்வதேச மனித உரிமைகள் பயிற்சித் திட்டம் | கனடா | 2017.06.02-2017.06.27 | 01 |
| 16 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான கருத்திட்ட நிதியளிப்பு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் முகாமைத்துவம | சீனா | 2017.06.07-2017.07.01 | 01 |
| 17 | வெற்றி பெற்ற தேசம், செயற்படுத்தல் மூலோபாயம் | சிங்கப்பூர் | 2017.06.12-2017.06.16 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | எல்லைத் தொடர்புகள் சம்பந்தமான US DOT செயலமர்வு | நேபாளம் | 2017.06.26-2017.07.02 | 01 |
| 19 | நகர அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான விசேட நிபுணர்களுக்கான கொள்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | தென்கொரியா | 2017.06.29-2017.09.23 | 01 |
| 20 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தகவல் அபிவிருத்தி மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் | சீனா | 2017.07.10-2017.08.08 | 01 |
| 21 | ஒரே பாதை, ஒரே இலக்கு நாடுகளுக்கான ஆற்றல் விருத்தி | சீனா | 2017.07.19-2017.08.08 | 01 |
| 22 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான நகரமயாமாக்கல் | சீனா | 2017.07.30-2017.08.19 | 01 |
| 23 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தேசிய இனக் கொள்கை மற்றும் பயிற்சி | சீனா | 2017.08.04-2017.08.24 | 01 |
| 24 | பணிவிணக்கப் பண்புடைய தொடர்புகளுக்கு உதவியளிக்க அரச கொள்திறனைக் கட்டியெழுப்புதல் | வியட்நாம் | 2017.08.06-2017.08.11 | 01 |
| 25 | ஆசிய நாடுகளுக்கான சீன அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டத்தின் நிதிச் சேவை | சீனா | 2017.08.16-2017.08.25 | 01 |
| 26 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான சந்தைக் கட்டுப்பாடடு முறைமை மற்றும் கட்டுப்பாட்டு ஆற்றல் | சீனா | 2017.08.18-2017.09.09 | 01 |
| 27 | விவசாய அலுவலர்களுக்கான தெற்கு அறிவு ஒத்துழைப்பு செயலமர்வு | சீனா | 2017.08.29-2017.09.04 | 01 |
| 28 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தொழில் முகாமைத்துவம் | சீனா | 2017.09.19-2017.10.09 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | ஒரே பாதை, ஒரே இலக்கு நாடுகளுக்கான எரிசக்திக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு | சீனா | 2017.09.20-2017.10.10 | 01 |
| 30 | மலேசிய தொழிநுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக நாடுகளின் பரிணாமம் | மலேசியா | 2017.09.25-2017.09.29 | 01 |
| 31 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான இளம் தொழில் தொடக்கநிலை | சீனா | 2017.09.27-2017.10.17 | 01 |
| 32 | ஒரே பாதை, ஒரே இலக்கு நாடுகளுக்கான சந்தை வசதிகள் திட்டம் | சீனா | 2017.10.11-2017.10.31 | 01 |
| 33 | ஒரே பாதை, ஒரே இலக்கு நாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, முதலீடு மற்றும் நிதியீட்டுத் திட்டம் | சீனா | 2017.10.10-2017.10.30 | 01 |
| 34 | அரச சேவையின் ஊக்குவிப்புத் திட்டம் | சிங்கப்பூர் | 2017.10.09-2017.10.13 | 01 |
| 35 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் | சீனா | 2017.10.11-2017.10.31 | 01 |
| 36 | மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பயிற்சித் திட்டம் | கட்டார் | 2017.11.13-2017.11.16 | 02 |

## 7.2 உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்

இ - அரச கொள்கைக்கு ஏற்றவாறு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளை இனங்கண்டு தீர்வுகளை வழங்குவதும், அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவின் அடிப்படை இலக்காகும்.

அதற்கமைய, கீழ் குறிப்பிடப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவைகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (Official website)**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை நிதமும் இற்றைப்படுத்துவதன் ஊடாக அதனைப் பயன்படுத்துவோருக்கு காலத்துகேற்ற மற்றும் சரியான தகவல்கள் துரிதமாக வழங்கப்படுகின்றன.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மெயில் சேவை. **(Internal Mail Service)**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேர்வருக்கு வெளித்தரப்பினரால் அனுமதியற்ற அணுகலை மேற்கொள்வதற்கான பல முயற்சிகள் இனங்காணப்பட்டதுடன், அவற்றை வெற்றிகரமாகத் தடுப்பதற்கு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவுக்கு முடியுமானது. மேற்குறித்த அனுமதியற்ற அணுகல்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்பு புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தெரியவரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக ஈ மெயில் சேவையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய மிகவும் நம்பகத்தன்மையைக் கொண்ட ஈ மெயில் சேவையொன்று பேணி வரப்படுகின்றது.

- **தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு**

  அலரி மாளிகை வளவு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலக வளவு அலுவலகங்களில் உட்புற வலையமைப்புக் கட்டமைப்பினை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் (ICTA) செயற்படுத்தப்படும் LGN 2.0 திட்டத்தின் கீழ் Wi-Fi வசதியுடன் கூடிய வகையில் நவீனமயப்படுத்த முடியுமானது. அதனூடாக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மேற்குறித்த வளவுகளுக்கு Video Conferencing வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நடைமுறைகளை முகாமைத்துவம் செய்தல். (Workflow Management)**

  I. கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் முகாமைத்துவம்
  II. அதிதிகள் வருகையை முகாமைத்துவப்படுத்தல்
  III. வேலைகளை ஒப்படைத்தல்
  IV. ஆவணங்கள் முகாமைத்துவம்

மேற்குறித்த செயல்முறைகளுக்கு மிகுந்த வசதிகளுடன்கூடிய மென்பொருள் அமைப்பொன்று தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்ப முகவர் நிறுவனம் ஊடாக நிறுவப்பட்டதுடன் அது பரீட்சார்த்த மட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளகப் பயன்பாட்டுக்கு மென்பொருள் கட்டமைப்பை உருவாக்குதல்**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக தாபன ரீதியிலான அலுவல்களை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான மென்பொருள்களை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவினால் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் ஊடாக மென்பொருள்களுக்கான செலவினத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமாக இருப்பதுடன், பிரதிகளாக நவீனமயப்படுத்தும் (version update) ஆற்றலும் காணப்படுகிறது. அதற்கமைய உள்ளக கடித அலுவல்களை இலகுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மென்பொருள் கட்டமைப்பை நவீனமயப்படுத்தி மிகவும் வசதிகளுடன்கூடிய வகையில் திருத்தியமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. அத்துடன் இலெக்ட்ரொனிக் உபகரணங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டை கணனிமயப்படுத்துவதற்கு மற்றும் அமைச்சரவை நிருபங்கள் தொடர்பான மென்பொருள் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், அது பரிசோதனை ரீதியாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

- **பணியாட் தொகுதி அலுவலர்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பயிற்சியை வழங்குதல்.**

  ICTA நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் பிரதம அமைச்சர் அலுவலக அதிகாரிகளின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பயிற்சித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்ய முடியுமாகியது. பயிற்சி நிறுவனத்துடன் கலந்துரையாடி பயிற்சிப் பாடநெறிகளைத் தேவைக்கு ஏற்ப மாற்றியமைப்பதன் ஊடாக உத்தியோகத்தர்களுக்கு மிகவும் பயன்மிக்க பயிற்சியை வழங்க முடியுமாகியதுடன், அதனூடாக உத்தியோகத்தர்களின் தகவல் தொழில்நுட்ப ஆற்றல்களை சிறந்த மட்டத்திற்கு கொண்டு வர முடியுமாகியது.

# 08. நிதிசார் முன்னேற்றம்

## 8.1 நிதிசார் முன்னேற்றம்

வருடாந்த அரவு செலவுத் திட்டத்தின் ஊடாக செலவுத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குத் தேவையான நிதி திறைசேரியினால் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி ஏற்பாடு 04 பிரதான கருத்திட்டங்கள் மற்றும் 02 உப கருத் திட்டங்களின் கீழ் மூலதன மற்றும் மீண்டெழும் என்ற ரீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதற்கமைய, 2017 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவாக ரூபா 913 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினமாக ரூபா 577 மில்லியன் என ரூபா 1490 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2017 ஆண்டிற்கான ஒவ்வொரு கருத் திட்டங்களின் கீழான நிதிசார் முன்னேற்றத்தைக் குறித்துரைக்கும் அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **கருத் திட்டம்** | **மொத்த நிதி ஏற்பாடு (ரூபா மில்லியன்)** | | **நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்)** | | | |
|---|---|---|---|---|---|---|
| | **மீண்டெழும்** | **மூலதன** | **மீண்டெழும்** | | **மீண்டெழும்** | |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 480 | 523 | 477 | 99% | 490 | 94% |
| பொது நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் | 275 | 38 | 266 | 97% | 31 | 82% |
| தேசிய ஊடக மத்திய நிலையம் | 44 | 13 | 32 | 73% | 1 | 8% |
| நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம் | 66 | 3 | 54 | 82% | 1 | 33% |
| ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தை கொழும்பு மற்றும் டோக்கியோவில் தாபித்தல் | 20 | 0 | 17 | 85% | 0 | - |
| மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன அலுவலகத்தை தாபித்து நடாத்துதல் | 28 | 0 | 9 | 32% | 0 | - |
| **மொத்தம்** | **913** | **577** | **855** | **94%** | **523** | **91%** |

அதற்கமைய, 04 பிரதான கருத்திட்டங்கள் மற்றும் 02 உப கருத் திட்டங்களின் கீழ் அலரி மாளிகை, விசும்பாய மற்றும் நுவரெலியா மற்றும் பென்தோட்டையில் அமைந்துள்ள பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லங்களின் நிர்வாக, வழங்கல்கள், பராமரிப்பு, மூலதனப் சொத்துக்கள் கையகப்படுத்தல், மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, தேசிய ஊடக மத்திய நிலையம், நல்லணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகம், ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தை கொழும்பு மற்றும் டோக்கியோவில் தாபித்தல், மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன அலுவலகத்தை தாபித்தல் மற்றும் நடாத்துதல் போன்ற மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.